பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | மார்கழி 10 | திங்கட்கிழமை 25.12.2017 | கதிர் 50

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய நத்தார் வாழ்த்துக்கள்!

சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

## புதுக்குடியிருப்பு மாணவர்கள் இருவர் குளத்தில் மூழ்கி நேற்று பரிதாபச் சாவு

### நண்பர்களுடன் குளிப்பதற்கு சென்றவேளை நடந்த துயரம்

(ச. தவசீலன்)
முல்லைத்தீவு,டிசெ.25
முல்லைத்தீவு, புதுக் குடியிருப்பு – கேப்பாபிலவு வீதியில் உள்ள கள்ளியடி ஆற்றில் குளிக்கச் சென்ற புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி உயர்தர மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக

பக்கம் 18





# மலேசியப் பிரதமர் – விக்கி சந்திப்பை குழப்ப கூட்டமைப்பு முயன்றதாம்!

## ரணில் மூலம் இரகசிய எத்தனம்

கொழும்பு, டிசெம்பர் 25
மலேசியப் பிரதமர் நஜிப் துன் அப்துல் ரஸாக் கடந்த வாரம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிற தலைவர்கள் எவரையும் சந்திக்காமல் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை மட்டும் சந்தித்தமையால் அந்த சந்திப்பை நடத்தவிடாமல் தடுத்து முடக்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூலம் கூட்டமைப்பின் தலைமை பகீரதப் பிரயத்தனம் செய்ததாகவும் அது கடைசியில் தோல்வியில் முடிந்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

பக்கம் 18

## துப்பாக்கி வைத்திருந்தவர் முல்லைத்தீவில் கைதானார்

முல்லைத்தீவு, டிசெ.25
முல்லைத்தீவு – உடுப்புக்குளம் பகுதியில் அனுமதியின்றித் துப்பாக்கி வைத்திருந்தவரை முல்லைத் தீவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
துப்பாக்கியை அவர் கொண்டு சென்றுகொண்டிருந்தபோதேகைது செய்யப்பட்டார்.

பக்கம் 18

## ஆர்.கே. நகர் தேர்தலில் டி.டி.வி.தினகரன் பெருவெற்றி!



தமிழகத்தில் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளர் டி.டி.வி.தினகரன் 40ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார். (விவரம் 16ஆம் பக்கத்தில்)

## விபத்தில் தீப்பிடித்தது மோ.சைக்கிள்; இளைஞர் ஒருவர் உடல் கருகிப் பலி!

### வட்டுக்கோட்டையில் நேற்று மாலை சம்பவம்



யாழ்ப்பாணம்,டிசெ. 25
யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை,கோட்டைக்காடு பகுதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்தார்.

பக்கம் 18

## புதிய கட்சிக்குத் தலைமை தாங்கும் மஹிந்தவின் அறிவிப்பு 2ஆம் திகதி?

கொழும்பு, டிசெ.25
கூட்டு எதிரணியின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கும் தனது உத்தியோகபூர்வ முடிவை எதிர்வரும் 2 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறும்கூட்டத்தில்வைத்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுப்பார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.
கூட்டு எதிரணி சார்பில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் 8 ஆயிரம்

பக்கம் 18



அனைவருக்கும் 'காலைக்கதிர்' நாளிதழின் கிறிஸ்தோதய திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

## மஹிந்த தரப்பின் எம்.பி. பதவிகளை பறிப்பதற்கு விரைவில் நடவடிக்கை?

கொழும்பு, டிசெ. 25
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஐக்கிய மக்கள் முன்னணியில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது தரப்பு எம்.பிக்கள் சுமார் நாற்பது பேர் மீது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்ஒழுங்குநடவடிக்கைவிரைவில் பாயும் என அக்கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.
எதிர்வரும்தேர்தலில்சு.கவுக்கு எதிராக கூட்டு எதிரணியின் சார்பில் பிரசாரம் செய்ய அவர்கள் பகிரங்கமாகக்களமிறங்கினால் அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை

பக்கம் 18

## மஹிந்த காலத்துக் கொலைகளை அம்பலமாக்கும் ஜே.வி.பியின் நூல்

### வெகுவிரைவில் வெளிவருகிறது

கொழும்பு, டிசெ.26
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றகொலைகள்தொடர்பான நூல் ஒன்றை ஜே.வி.பி. வெளியீடு செய்யவுள்ளது.

பக்கம் 18

# மஹிந்த தரப்பு மீது சு.க. நடவடிக்கை எடுக்க முயன்றால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தன் பறிகொடுப்பார்



கொழும்பு, டிசெ.25
மஹிந்ததரப்பில் உள்ள சு.கவின் எம்.பிக்கள் மீது சுதந்திரக் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை பாயுமானால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பறிகொடுக்கலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சு.கவுக்கு எதிராக, கூட்டு எதிரணிக்குப் பகிரங்கமாக ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் மஹிந்த தரப்பில் உள்ள சு.கவின் எம்.பிக்கள் ஈடுபட்டால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை பாயும் என சு.க. தலைமை மிரட்டி வருகின்றது.
முன்னரும் மேதினம் போன்றவற்றை ஒட்டி இத்தகைய அச்சுறுத்தல்களை மஹிந்த தரப்பு எம்.பிக்களுக்கு எதிராக

பக்கம் 18



# அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு நிகழ்வு எழுச்சியுடன் பிரான்ஸ் தலைநகர் பரிஸில்

பரிஸ், டிசெ. 25

தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 11 ஆவது நினைவெழுச்சி நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பரிஸின் புறநகர்ப் பகுதியில் உள்ள நந்தியாரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, நந்தியார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை நந்தியார் தமிழ்ச் சங்கத் தலைவர் சாந்திக்குமார் ஏற்றி வைத்தார்.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை லெப்.கேணல் அன்புக்குமரன் மற்றும் வீரவேங்கை தங்கமணி ஆகியோரின் சகோதரர்கள் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தியுள்ளனர்.

டிசெம்பர் மாதத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை கடற்கரும்புலி சுதாஜியின் தாயார் ஏற்றி வைத்தமையுடன், மலர் வணக்கம் செலுத்தினார்.




அதன் பின்னர் அக வணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நந்தியார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சாந்திக்குமார் பாலா அண்ணா பற்றிய உரையையும், மாணவிகளின் நடனமும், கவிதையும் இடம்பெற்றது.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு செயற்பாட்டாளர் மேத்தா சிறப்புரை ஆற்றினார்.

அவர் தனது உரையில், தேசத்தின் குரல் பாலா அண்ணாவின் இழப்பு எமது இனத்திற்கு பேரிழப்பு என்றும், புலம்பெயர் புத்திஜீவிகள் இனிமேலாவது எமது மக்களின் உரிமைப் போருக்கு குரல் கொடுக்க முன்வர வேண்டும் என்றும் இன்றைய எமது போராட்டப் பாதையில் தம்மையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)



# வவுனியா மூன்றுமுறிப்பு இராணுவ முகாமுக்குள் நிர்வாணமாக புகுந்த இளைஞனால் பரபரப்பு!




வவுனியா மூன்றுமுறிப்பு இராணுவ முகாமுக்கு நேற்று அதிகாலை ஆடையின்றி நிர்வாணமாக புகுந்த இளைஞனால் பதற்றம் ஏற்பட்டது.

வவுனியா ஏ9 வீதியில் அமைந்துள்ள மூன்றுமுறிப்பு இராணுவ முகாமுக்கு முழு நிர்வாணமாக இளைஞர் ஒருவன் புகுந்துள்ளார்.

இதன்போது அந்த இளைஞனை இராணுவத்தினர் சுற்றி வளைத்து கைது செய்துள்ளனர்.

அத்துடன், இராணுவத்தினர் அந்த இளைஞனுக்கு உடை அணிவித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

எனினும், இந்த இளைஞன் என்ன காரணத்திற்காக முகாமுக்குள் உள்நுழைந்தார்? எவ்வாறு நுழைந்தார்? என்ற விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

18 வயதுடைய முகமட் நசீர் என்ற இளைஞனே இவ்வாறு நிர்வாணமாக முகாமுக்குள் நுழைந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## ரயிலில் மோதி யானை பலி!



கொழும்பு, டிசெ. 25

பொலன்னறுவை, செவனப்பிட்டிய, கொலகனா பகுதியில் நேற்று அதிகாலை ரயிலில் மோதுண்டு 9 அடி உயரம் கொண்ட யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

கொழும்பிலிருந்து, மட்டக்களப்பு நோக்கிப் பயணித்தரயிலில்மோதுண்டே, இந்த யானை உயிரிழந்துள்ளது என வெலிகந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

# வரி விதிப்பை எதிர்த்து மீனவர் ஊர்காவற்றுறையில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

ஊர்காவற்றுறை தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

தம்பாட்டியில் அமைக்கப்பட்ட மீன் சந்தையில் கடற்றொழிலாளர்களிடம் புதிதாக அறவிடப்படும் வரியைநிறுத்துமாறுவலியுறுத்தியே அவர்கள் இந்த ஆர்ப்பாட் டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களிடம் கொள்வனவு செய்யப்படும் கடல் உணவு வகைகள், உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படும்.

அதன் பின்னர் வரும் மேலதிக கடல் உணவுகளே வெளியிடங்களுக்கு அனுப்பப்படும். ஊர்காவற்றுறை பிரதேச சபையால் தற்போது சந்தை ஒன்று அமைக்கப்பட்டது. அந்த சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களிடம் பிரதேச சபையால் வரி அறவிடப்படுகிறது. அதனால் உள்ளூர் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் எடுத்து வரி அறிவிடுவதை பிரதேச சபை நிறுத்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.




பிரதேச சபைக்கு முன்பாக

# மக்களின் செல்வாக்குக்கு அஞ்சியே முதலமைச்சர் மீது விமர்சனங்கள்

## ஐங்கரநேசன் காட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.25

வடக்கு முதலமைச்சர் க.வீ.விக்னேஸ்வரன் ஓர் அரசியல்வாதியாகத் தோற்று விட்டார் என்று கூறுபவர்கள் முதலமைச்சரின் மக்கள் செல்வாக்குக்கு அஞ்சியே அவ்வாறு விமர்சித்து வருகின்றனர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும் மத்திய அமைச்சருமான டிலான் பெரேரா, முதலமைச்சர் விக்னேஸ்வரன் சிறந்த நீதியரசராக இருந்தபோதும் அரசியல்வாதியாகத் தோற்றுவிட்டார் என்று அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்துக்கு பதிலளிக்கும் விதமாக,பொ.ஐங்கரநேசன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு முதலமைச்சர் க.வீ.விக்னேஸ்வரன் ஓர் அரசியல்வாதியாகத் தோல்வியடைந்து விட்டார் எனவும், மத்திய அரசு வழங்கும் நிதியையே சரியாகப் பயன் படுத்தத் தெரியாத முதல மைச்சர் மலேசியா வழங்கும் நிதியை என்ன செய்வார் என்று புரியவில்லையெனவும் கேலி யும் கிண்டலும் தொனிக்கச் சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இரா ஜாங்க அமைச்சருமான டிலான் பெரோ பேசியிருக்கின்றார்.

அவர் மட்டுமல்ல,சிங்களத் தரப்பு அரசியல்வாதிகள் பலரும் தமிழ் அரசியல் வாதிகள் சிலரும் முதலமைச்சர் விக்னேஸ்வரனையும், வடக்கு மாகாண சபையையும் விமர்சிக்கும் போக்கு அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

முதலமைச்சரின் மக்கள் செல்வாக்குக்கு அஞ்சும் அரசியல்வாதிகளே, மக்கள் மனங்களில் இருந்து அவரைக் கீழிறக்கும் உள்நோக்கில் இவ்வாறு தவறாக விமர்சித்து வருகின்றனர்.

விக்னேஸ்வரன் அவர்கள் நீண்டகாலமாகத் தென்னிலங் கையில் வாழ்ந்தவர் என்பதா லும்,சிங்களத்தரப்புடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தமையாலும் அவரைத் தமது விருப்புகளுக்கு ஏற்ப கையா ளலாம் என்பதே சிங்களத் தலைமைகளினதும் அவரை முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கியவர்களினதும் எண்ணவோட்டமாக இருந்தது.

ஆனால்,இவர்களது எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறாக முதலமைச்சரின் செயற்பாடுகள் அமைந்தன. தமிழ் மக்களின் அரசியல் வேணவாவையும் போரில் அவர்கள் பட்ட ஆற்றொணாத் துயரங்களை யும் நேரில் கண்டுணர்ந்த முதலமைச்சர், அவற்றுக்கான நிரந்தரத்தீர்வு வேண்டி உள்நாட்டி லும் சர்வதேச அரங்கிலும் குரல் எழுப்ப ஆரம்பித்தார்.

தங்களின் குரலாகவே முதலமைச்சர் இருக்கின்றமையை உணர்ந்த மக்களிடையே அவர் மீதான பற்றும் செல்வாக்கும் உயர்ந்தது. முதலமைச்சர் அவர் களுக்கு ஏற்பட்டு வருகின்ற செல்வாக்கு, எங்கே மீண்டும் தமிழ்த் தேசியம் பலம்பெற்றுவிடுமோ என்ற அச்சத்தைப் பேரினவாதச் சிங்கள அரசியல் தலைமைகளிடையேயும்,எங்கே தங்களுடைய இருப்பு பறிபோய்விடுமோ என்ற அச்சத்தைச் சில தமிழ் அரசியல் வாதிகளிடையேயும் ஏற்படுத்தி யுள்ளது.


முதலமைச்சரின் மக்கள் பேராதரவுப் பலத்துக்கு அஞ்சுகின்ற இவர்கள் கூட்டிணைந்து முதலமைச்சர் அவர்களைப் பதவி கவிழ்க்கும் திரைமறைவுச் சதி யில் ஈடுபட்டனர்.

அமைச்சர்கள் மீதான உண்மைக்குப் புறம்பான ஊழற் குற்றச்சாட்டுகளும் அவர்களது பதவி விலகல்களும், அதைத் தொடர்ந்து ஆளுநர் அவர்களிடம் முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக் கையளிப்பும் இச்சதியின் சில கட்டங்களே.

முதலமைச்சரைப் பதவி கவிழ்க்க இயலாத நிலையில், இந்தத் தரப்பினரே தற்போது முதலமைச்சர் அரசியலில் தோற்றுவிட்டார் எனப் பரப்புரை செய்ய ஆரம்பித்துள்ளனர். அதிகாரங்கள் எதுவும் இல்லாத, சுயமாகச்செயற்பட முடியாத மாகாண சபை முறைமையில் உள்ள குறைபாடு களை முதலமைச்சர் க.வீ.விக்னேஸ் வரன் தனிப்பட்ட குறைபாடு களாகச் சித்திரித்துக்காட்டிமக்கள்மனங்களிலிருந்து அவரை கவிழ்க்கும் முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய பரப்புரைகளின் பின்னால் உள்ள தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலைத் தமிழ் மக்கள் நன்றாகவே புரிந்து கொள் வார்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (இ)

# தமிழரசுப் பட்டியலில் சிங்கள வேட்பாளர்கள்!



| | | |
|---|---|---|
| 07. புளியங்குளம் வடக்கு, நெடுங் | நாகலிங்கம் யோகராசா | 5 2 0 4 2 0 0 3 7 V |
| 08. பரந்தன் - ஆனந்தர் புளியங்குளம் | பொன்னையா தேவராசா | 6 5 0 9 5 3 3 1 2 V |
| 09. ஊஞ்சால்கட்டி - மருதோடை | சிவசுந்தரம் சிவசேகரம் | 5 4 2 5 9 3 4 7 4 V |
| 10. பட்டிக்குடியிருப்பு, கற்குளம் | மயில்வாகனம் செந்தூரன் | 8 1 0 4 9 4 5 2 2 V |
| 11. கஜபாபுர | வெலிகம கங்காணம்கே மங்கள ரத்னசிறி பண்டார | 8 4 1 5 3 4 1 2 3 V |
| 12. கல்யாணபுர | பெரகார கெதர ரேணுகா புஸ்பலதா | 8 3 6 9 4 0 2 1 0 V |
| 13. எத்தாவெட்டுனுவெவ | விமலநாதன் திரேசா | 8 6 8 4 4 4 9 6 7 V |
| 14. சம்பத்நுவர | சிப்பதொரு துப்பஹிகே நளிந்த ஸ்டீவன் சில்வா | 8 3 0 8 8 1 9 7 2 V |

வவுனியா,டிசெ.25

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியா வடக்கில் தமிழரசுக்கட்சியில் போட்டியிடுவதற்கு சிங்கள வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தமி ழர்களது தாய் நிலத்தை ஆக்கிரமித்து முன்னெடுக்கப்படும் சிங்கள குடியேற்றங்கள் மற்றும் குடியேற்றவாசிகளை அங்கீகரிக்கின்ற ஒரு நடவடிக்கையாகவே தமிழரசுக் கட்சியின் சிங்கள வேட்பா ளர்கள் களமிறக்கப்படு கின்றமை அமைவதாக அவதானிகளை மேற்கோள்காட்டி சில செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கஜபாபுர, கல்யாணபுர, சம்பத்நுவர பகுதிகளிலே குடியேறியுள்ள சிங்களவர்களிடமிருந்தே வேட்பாளர்களைத் தமிழரசுக்கட்சி தெரிவுசெய்துள்ளது.

வவுனியாவுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கமே சிங்கள வேட்பாளர்களைக் களமிறக்கினார் எனச் சொல்லப்படுகின்றது.

# ஆலயங்களில் நேற்று அமைதியான நத்தார்

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ். குடாநாட்டு கத்தோலிக்க ஆலயங்களில் நேற்று நள்ளிரவு அமைதியான நத்தார் ஆராதனைகள் இடம்பெற்றன.

நேற்று நள்ளிரவு நத்தார் ஆரா தனைகள் ஆலயங்களில் மிகச் சிறப்பான முறையில் இடம்பெற்றன. மக்கள் குடும்பம் குடும்பமாக ஆராதனைகளில் பங்குபற்றி பாலகன் இயேசுவின் அருளைப் பெற்றனர்.

யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் தலைமையில் நத்தார் ஆராதனை இடம்பெற்றது.

அமைதியான முறையில் கத்தோலிக்க மக்கள் நத்தார் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கோபுவுக்கு நேற்று அஞ்சலி...





மூத்த பத்திரிகையாளர் அமரர் எஸ்.எம்.கோபாலரட்ணம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்களான ம.வ.கானமயில்நாதன், அ.பெருமாள், ந.வித்தியாதரன், மனோகரன் ஆகியோர் அஞ்சலி உரைநிகழ்த்தினர். நிகழ்வில்நாடாளுமன்றஉறுப்பினர்சி.சிறிதரன்கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.



# விமான நிறுவனங்களின் மோசடியை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

மிஹின் லங்கா மற்றும் ஸ்ரீலங்கா எயார்லைனஸ் நிறுவனங்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி மோசடி சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் இந்தக் குழுநியமிக்கப்படும்என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிணைமுறிமோசடிசம்பந்தமாகவிசாரணைசெய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை இம்மாதம் 31ஆம் திகதி கிடைக்கப் பெறும் என்று அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

# உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகும் ராஜாங்க அமைச்சர்



கொழும்பு,டிசெ.25

திறன்அபிவிருத்திமற்றும்தொழிற்கல்வி ராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகத் தரமுயர்த்தப்படவுள்ளார்.

இதற்கான பரிந்துரையைச் சட்டம் ஒழுங்கு அமைச் சுக்கு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுப்பிவைத் துள்ள தென ஆணைக்குழுவின்பேச்சாளர் குறிப்பிட்டார்.

அரசியலுக்கு வருவதற்கு முன்னதாகப் பொலிஸ் சேவையில் இருந்த பாலித ரங்கே பண்டார, அந்தக் காலப் பகுதியில் தாம்அரசியல்ரீதியான பழிவாங்கல்களுக்கு முகங்கொடுத்தார் எனத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறையிட்டிருந்தார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது. அந்த வகையில் 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவர் பதவியில் அமர்த்தப்பட்டு, அதே மாதம் 27ஆம் திகதி பதவி உயர்வு வழங்கப்பட்டுப் பின்னர் ஓய்வுபெற் றார் என அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை, அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படாத காலகட்டத்திற்காக ஒரு தொகைப் பணத்தைப் பெறும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கிறிஸ்தோதய சங்கற்பம்

இன்று கிறிஸ்தோதயத் திருநாள்.

இறைமகன் இயேசு அவனியில் அவதரித்த புனித நாள் இன்றாகும்.

சமாதானப் பிரபு இயேசு, உலகுக்கு அமைதிக்கான செய்தியை எடுத்து வந்த திருநாள் இதுதான்.

நமது மனுக்குலத்துக்கு மாண்பையும், நம்பிக்கையும், சமாதானத்தையும் ஊட்டும் நற்செய்தியோடு இறைதூதன் பாலனாய் அவதரித்து மானிடத்தைத் தேடி வந்த உயரிய தினம் இது.

இன முரண்பாட்டின் உச்சத்தில் பிளவுபட்டு நிற்கும் இலங்கைத் தீவு சமாதானத்தையும், கௌரவமான வாழ்வையும், இணக்கமான சமாதானத் தீர்வையும் தாகத்தோடு தேடி நிற்கும் ஒரு வேளையில் இந்த கிறிஸ்தோதயத் திருநாள் நம் மத்தியில் விடிவெள்ளியாய் வருகின்றது.

இரக்கம், அன்பு, கருணை, சகிப்புத் தன்மை, அமைதி, புரிந்துணர்வு, சமாதானம், நீதி, எளிமை, சாந்தம், மன்னித்தல், விட்டுக் கொடுத்தல், பிறரையும் பிறவுயிர்களையும் மதித்துப் பேணுதல் ஆகிய நற்பண்புகளை போதித்து, பரப்பி, வாழ்ந்து காட்டி, வழிப்படுத்தவே பாலன் இறைதூதராக நம் மத்தியில் தோன்றினார்.

அவரின் வழிகாட்டுதலும், போதனையும், நெறிப்படுத்தலுமே முரணிலையின் உச்சத்தில் பிளவுபட்டு நிற்கும் இலங்கைச் சமூகத்துக்கு அவசரமாகவும், அவசியமாகவும் இன்று தேவைப்படுகின்றன.

உலகின் மிக உயரிய நான்கு மதங்கள் சங்கமிக்கும் குட்டித் தீவாக இலங்கை விளங்குகின்றது. பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாமியம், இந்து சமயம் ஆகிய மிக மேன்மையான மத நெறிகள் - மார்க்கங்கள் - நம் இலங்கைத் தீவில் நிலை கொண்டிருந்தாலும் அந்த மதங்கள் போதிக்கும் சகிப்புத்தன்மையும், அமைதியும், சமாதானமும், கருணையும் இங்கு நிலவவில்லை என்பதே மறுக்கப்பட முடியாத - வேதனைக்குரிய - உண்மையாகும்; யதார்த்தப் புறநிலையாகும்.

இன, மத, மொழி வேறுபாடுகளால் பிளவுபட்டு, முரண்பட்டு, முட்டிமோதி, குரோதத்தின் விளிம்பில் சிக்குண்டு கிடக்கின்றது இலங்கைச் சமூகம்.

குறிப்பாக, நமது யாழ். குடாநாடு கடந்த ஓரிரு வாரத்திற்குள் மத முரணிலையின் உச்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றமையை அண்மைக்கால செய்திகள் நமக்கு அச்சமூட்டும் வகையில் உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

சகிப்புத்தன்மையின் உச்சத்தைப் பேணவேண்டிய மத பீடங்களே கொதித்தெழுந்து அறிக்கைகளை வெளியிடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அரசியலும், ஆட்சியியலும் மக்களின் மத நம்பிக்கைகளைச் சுரண்டிப் பார்த்து, உசுப்பேத்திவிடும் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருக்கின்றன.

இந்த இரண்டிலுமான மதத் தலையீடும், மத மேலாண்மையும் மக்களைப் பிளவுபட்டு, பிரிந்து நின்று, முரண்பட்டு மோத வழிப்படுத்தி நிற்கின்றமை வேதனைக்குரிய உண்மை.

நம் தேசத்தில் நிலைத்திருக்கும் நான்கு மதங்கள்தாம் உலகில் உயரிய நிலையில் அன்பையும், சகிப்புத்தன்மையும், விட்டுக் கொடுப்பையும், அறநெறிகளையும், நீதி - நியாயத்தையும் போதித்து நிற்கின்றன.

ஆனால் இங்கு இணக்கமின்மைக்கும், பிணக்கிற்கும் காரணம் ஒருபுறம் மொழி என்றால் மறுபுறம் மதம் என்ற நிலைமையே நீடிக்கின்றது.

இந்தக் குரோத நிலையிலிருந்து நமது தேசம் மீள வேண்டுமானால் - நம் மக்கள் மத்தியில் புரிந்துணர்வு, நல்லிணக்கம், உடன்பாடு, சமாதானம், அமைதி, சகவாழ்வு, இனசௌஜன்யம் ஏற்பட வேண்டுமானால் - இந்த நான்கு உயரிய மார்க்கங்களும் போதித்த சகோதரத்துவத்தை மதிக்கின்ற மாண்பு இங்கு நிலைநிறுத்தப்பட வேண்டும்.

அந்த மாண்பையே நமது மனுக் குலத்துக்கான செய்தியாக எடுத்து வந்தார் சமாதானப் பிரபுவான இயேசு. அதனை அவர் போதித்தார். அந்த நெறியிலேயே அவர் வாழ்ந்து காட்டி, உலகத்தை நெறிப்படுத்தினார்.

பாவ வாழ்க்கையிலிருந்து மனுக்குலத்தை மீட்கவே இயேசு பாலனை - இறைமகனை - தனது தூதனாக மனித உருவில் இறைவன் அனுப்பி வைத்தான் என்பது விவிலியம் கூறும் கருத்துரை.

அந்த மீட்புப் பணியில் வெறும் போதனையாளராக - பிரசங்கம் செய்பவராக - உபதேசம் புரிபவராக - இயேசு பிரான் அமைந்து விடவில்லை. மாறாக, மனிதன் மனிதனாக வாழ்வதற்குரிய விழுமியங்களை அவர் முன்மாதிரியாக வாழ்ந்துகாட்டி, வழிப்படுத்தினார்.

பெருங் கருணைக்கும், பேரிரக்கத்துக்கும், அளவிட முடியாத சகிப்புத்தன்மைக்கும், விட்டுக் கொடுப்புக்கும், சாந்தத்துக்கும், எளிமைக்கும் உதாரண புருஷராக விளங்கினார்.

இயேசு பாலன் காட்டிய அந்த சத்திய வழியை - உயர்ந்த நெறியை - நம் மனங்கொண்டு, அதன் வழி வாழ நமது தேசம் தயாராகுமானால் சகோதரத்துவம் மதிக்கப்படும்; இனக் குரோதமும், மத மாச்சரியமும், மொழி முரண்பாடும் தானே மறையும், அரவணைக்கும் மாண்பு ஓங்கும். அமைதித் தீர்வும், சமாதான வாழ்வும், இன ஐக்கியமும், தேச சுபீட்சமும் தானே மலரும்.

# மாலி செல்லும் ராணுவத்தின் பிரதிநிதிகள் பாதுகாப்புச் செயலர் கபிலவுடன் சந்திப்பு!



கொழும்பு, டிசெ. 25

மாலி நாட்டின் ஐக்கிய நாடுகளின் பல்பரிமான ஒருங்கிணைப்பு நிலைப்படுத்தல் பணிக்காகச் செல்லவுள்ள இலங்கை இராணுவத்தின் பிரதிநிதிகள் குழுவினர் பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்தனர்.

பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது பாதுகாப்பு செயலாளர், மாலி நாட்டின் ஐக்கிய நாடுகளின் பல்பரிமான ஒருங்கிணைப்பு நிலைப்படுத்தல் பணிக்காக செல்ல இருக்கும் குழுவினர் தமது பணிகளைவெற்றிகரமாக மேற்கொள்ள வாழ்த்துக்களை தெரிவித்தார்.

பாதுகாப்பு செயலாளரின் வாழத்துக்களுக்கு குழுவின் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் களன அமுனுபுர, குழு சார்பாக நன்றியைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் பிரதி இராணுவ இணைப்பு அதிகாரி உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பொலிஸாருக்கு மக்களின் கௌரவத்தை இப்போது வென்றெடுக்க முடிந்துள்ளது

### கூறுகிறார் அமைச்சர் சாகல ரட்நாயக்க



கொழும்பு, டிசெ. 25

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து பொலிஸாருக்கு மக்கள் கௌரவத்தை வென்றெடுக்க முடிந்தது என சட்ட ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

பயிற்சியை பூர்த்தி செய்து 476 பொலிஸ் அதிகாரிகள் வெளியேறும் நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு உரையாற்றினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

275 பொலிஸ் கான்ஸ்டபிள்களும், பெண்கான்ஸ்டபிள் ஒருவரும் இந்தப் பயிற்சியில் இணைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

பொலிஸை மீளமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், பொலிஸ் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

பொலிஸார் பதவி உயர்வு தொடர்பான நெருக்கடிகளுக்கும் தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார். (க)

# புதிய கூட்டமைப்பின் ஒன்றுகூடல் நேற்று வவுனியாவில் ஆரம்பம்



கொழும்பு, டிசெ. 25

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் களமிறங்கும் புதிய கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு வவுனியாவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுக் முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகியது.

புதிய தேர்தல் முறை பற்றிய விடயங்கள், தேர்தலின் போது வேட்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இதில் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக்கருத்தரங்கில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை உறுப்பினர்களான ம. தியாகராஜா, இ.இந்திரராசா, ஈரோஸ் அமைப்பின் முக்கியஸ்தர் செந்தில்நாதன் உள்ளிட்ட பிரமுகர்களும் அங்கத்துவ கட்சிகளின் செயற்பாட்டாளர்களும், வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

(க)

## நாளை

26.12.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : உத்தரட்டாதி மு.இ. 9.23 வரை
திதி : அட்டமி மு.இ. 9.38 வரை
சுபநேரம் : 10.57 – 12.27 வரை
இராகுகாலம்: 3.27 – 4.57 வரை

காலைக்கதிர்
Kalaikkathir
திங்கட்கிழமை
25.12.2017



# ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழு அடுத்த வருடம் இலங்கைக்கு விஜயம்



கொழும்பு, டிசெ. 25

ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழு ஒன்று அடுத்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

ஐரோப்பியநாடாளுமன்றத்தின் இலங்கைக்கான நட்புறவுக் குழுவின் முக்கியஸ்தரான ஜெப்ரி வேன் ஒடென், இலங்கைக்கான வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்கவைச் சந்தித்தவேளையிலே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இராஜாங்க அமைச்சர் ஒன்றியத்தின் பிரதி செயலாளர் நாயகத்தையும் அவர் சந்தித்துள்ளார்.

இலங்கைக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் பல்வேறு துறைகளில் மேலும் தொடர்புகளை மேம்படுத்துகின்றமை தொடர்பாக இரு தரப்பினர்களும் பேச்சு நடத்தியுள்ளனர்.

லக்ஷம்போர்க் வர்த்தக சபையுடன் இராஜாங்க அமைச்சர் நடத்திய பேச்சின்போது இரு நாடுகளுக்கிடையில் வாத்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிப்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் இலங்கையில் இருந்து வர்த்தகக் குழு ஒன்று லக்ஷம்போர்க்குக்கு விஜயம் செய்ய இருக்கிறது எனவும் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க இதன்போது தெரிவித்தார். (க)

# வடக்கின் வீடமைப்புப் பிரச்சினை: அடுத்த வருடத்தில் தீர்வு!



கொழும்பு, டிசெ. 25

வடக்கில் நிலவும் வீடமைப்புப் பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்தில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் லக் விஜயசாகர பலன்சூரிய தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு வீடமைப்பு, அபிவிருத்தி அதிகார சபைக்கு முக்கியமான ஆண்டாக அமையும் என்று குறிப்பிட்ட அவர் 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 510 வீடமைப்புத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்றும் கூறினார்.

2018 ஆம் ஆண்டில் வீடமைப்பு, அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டுள்ள பணிகள் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்–

600 மாதிரிக் கிராமங்களின் பணிகளை நிறைவு செய்வதே இலக்காகும். இதற்குத் தேவையான நிதி வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# தேர்தல் பிரசார களத்தில் ரோஹித; அதிர்ச்சியில் பஸில் ராஜபக்ஷ!



கொழும்பு, டிசெ. 25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கைகள் மஹிந்தவின் புதல்வர்களின் தலைமையில் நடைபெறுகின்றமையால் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வருத்தத்தில் உள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார முன்னாயத்த நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் மஹிந்தவின் புதல்வரான ரோஹித ராஜபக்ஷ மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களால் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

பேச்சு போதும் - வேலையை ஆரம்பிப்போம் என்ற தலைப்பில் அந்த பிரசார மாதிரி தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மஹிந்த ராஜபக்ஷவும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷவால் இந்தப் பிரசார நடவடிக்கை ட்ரைஎட் உட்பட நாட்டின் பிரதான பிரசார நிறுவனங்களிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு ரோஹித ராஜபக்ஷ தலையிட்டிருக்கின்றமையும், மஹிந்த ராஜபக்ஷ, ரோஹித ராஜபக்ஷவின் தீர்மானத்துக்கு விருப்பம் தெரிவித்திருக்கின்றமையும் பஸில் ராஜபக்ஷவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

2015 தேர்தல் பிரசாரங்களைக் கெடுத்ததும் மஹிந்தவின் புதல்வர்கள்தான் எனவும், இந்த முறையும் கெடுப்பதற்கே நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பஸில் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளார் என அந்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (க)

# மன்னார் தீவுப் பகுதியில் காற்று வலு மின்நிலையம்!



கொழும்பு, டிசெ. 25

மன்னார் தீவுப்பகுதியில் காற்று வலு மின்நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையிலும் பொலன்னறுவை மாவட்டத்தில் வெலிகந்தையிலும் 2019 ஆம் ஆண்டில் சூரிய வலு மின் நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பத்து மெகாவோல்ட் கொள்ளளவுடன் கூடிய சூரியவலு மின்நிலையங்களை ஆரம்பிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் 20 மெகாவொட் சூரிய வலு மின் சக்தி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

100 மெகாவோல்ட் சூரிய வலு மின்நிலையம் மொனறாகலை மாவட்டத்தின் சியம்பலாண்டு பிரதேசத்தில் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான எரிசக்தி மூலம் நாட்டின் மின் சக்தித் தேவையில் 70 சதவீதமான தேவையை நிவர்த்தி செய்வது அரசின் இலக்கு ஆகும். (க)

# சீதுவை பாதுகாப்பு படை தலைமையகத்தில் நடந்த பரா விளையாட்டுப் போட்டிகள்!









கொழும்பு, டிசெ. 25

சீதுவையில் உள்ள விசேட படையணித் தலைமை வீரர்களால் இடம்பெற்ற பரா விளையாட்டுப் போட்டிகள் இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தலைமையில் நடைபெற்றன.

சீதுவை படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்தப் போட்டிகளில் கோப்ரல் ஜெ.ஏ.எம்.பி.ஜயகொடி தமது திறமையை வெளிக்காட்டியுள்ளார்.

ஆசிய மற்றும் சீனா, இத்தாலி போன்ற நாடுகளில் இடம்பெற்ற படகோட்டப் போட்டிகளிலும் கோப்ரல் ஜெ.ஏ.எம்.பி.ஜயகொடி நான்காம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இவர் இராணுவ பரா ஓட்டப் போட்டிகளிலும் தமது திறமையை வெளிக்காட்டியுள்ளார்.

இந்த நிகழ்வை முன்னிட்டு மரணித்த மற்றும் அங்கவீனமுற்ற விசேட படை வீரர்களது பிள்ளைகள் 11 பேருக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டது.

இதன்போது குறித்த படைத் தலைமையகத்தில் சேவையாற்றும் சிவில் சேவகர்களது குடும்பத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விசேட படையணியின் கட்டளை அதிகாரியான லெப்டினனட் கேர்ணல் அசங்க பெரேரா, படைத் தலைமை சென்டர் கெமடாண்ட் பிரிகேடியர் ஹரேந்திர ரணசிங்க, கட்டளை அதிகாரியான பிரிகேடியர் செனரத்யாபா, பிரதி சென்டர் கெமாண்ட் கேர்ணல் சந்திமால் மற்றும் படை வீரர்கள் உள்ளிட்ட படைவீரர்களது குடும்ப அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். (க)

# அம்பாறை தமிழ் மக்களுக்காக அரிசி மா தயாரிப்பு நிலையம்

## அமைத்துக் கொடுத்தது கனடா தமிழ் ஒன்றியம்

அம்பாறை, டிசெ.25

கனடாவில் வாழும் பிரம்ரன் தமிழ் ஒன்றியம், அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நிலையைக் கருத்திற்கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அரிசிமா தயாரிப்பு நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

இலங்கையின் மக்கள் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாக கட்டப்பட்ட அரிசிமா தயாரிப்பு நிலையத் திறப்பு விழா நேற்று முன்தினம் ஒன்றியத்தின் பணிப் பாளர் ஆர்.தில்லைநாயகம் தலைமையில், கல்முனை குவாரி வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் இடம் பெற்றுள்ளது.

இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வாழும் மக்களின் அமைப்பான பிரம்ரன் தமிழ் ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் இக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் நாளுக்கு நாள் தமிழர்களின் நிலையில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு மாவட்டமாக





காணப்படுகின்றது. இந்த நிலையில், கனடாவில் வாழும் பிரம்ரன் தமிழ் ஒன்றியம், அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் நிலையைக் கருத்திற்கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அரிசிமா தயாரிப்பு நிலையத்தை அமைத்துக் கொடுத்துள்ளது எனப் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அபிவிருத்தி ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

விழாவின்போது, பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் சிறப்பு அதிதிகளாக, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் கி.துரைராசசிங்கம், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ. வாகிட், கல்முனை ஸ்ரீமுருகன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சச்சிதானந்தசிவம் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப)

# பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி





சுவைமிகு பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம் பெற்றது. கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த உணவுக் கண்காட்சி நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் வளர்மதி ரவீந்திரன் தலைமையில் திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்தில் இந்தக் கண்காட்சி நடைபெற்றது.

இதில் அதிதியாக கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஜே.ஜே.முரளிதரன் கலந்து கொண்டார். அத்து டன், மேலும் பலர் இந்த கண்காட்சியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

# கிணற்றிலிருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, டிசெ.25

மட்டக்களப்பு - காத்தான்குடி, தாழங்குடாப் பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. கொக்கட்டிச்சோலை முனைக்காடு பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு வீடு திரும்பிய 61 வயதுடைய செ.தவமணி என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் ஒருவர் விசாரணைக்காக காத்தான்குடி பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# பிரதேச இலக்கிய விழா





கல்முனை, டிசெ.25

கலாசார அலுவல்கள் திணைக்களமும் கல்முனை தமிழ் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பிரதேச இலக்கிய விழா நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் க.லவநாதன் தலைமையில் பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு பிரதேசத்தில் கலைப்பணியாற்றிவரும் நான்கு மூத்த கலைஞர்கள் முதற்கட்டமாக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு, பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களும், அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் ஆலையடிவேம்புப் பிரதேச செயலாளர் வீ.ஜெகதீசன் , உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இராஜகுலேந்திரன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ப)

# கூட்டமைப்பை உடைக்க மஹிந்த எடுத்த முயற்சிகள் தோல்வியில்

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு



கல்முனை, டிசெ.25

கூட்டமைப்பை உடைக்க மஹிந்த எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என கல்முனையில் இடம்பெற்ற அரிசி ஆலைக் கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஆட்சியில் மஹிந்த ராஜபக்ஷ பணத்தைக் கொடுத்தும் பதவியைக் கொடுத்தும் கட்சிகளைப் பிரித்துப் பலமிழக்கச் செய்திருந்தார். இந்த நிலையில்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் பிளவுபடுத்தும் செயல்களைச் செய்தபோதும் எம்மவர்கள் இடமளிக்காதமையால் தோல்வியில் முடிந்தன.

ஆனால், பியசேன பணத்திற்காகத் தமிழ்மக்களை அடகுவைத்துவிட்டுச் சென்றிருந்தார். எனினும் பல பயமுறுத்தல்கள் இருந்தபோதும் அதற்கு எதிராகக் குரல்கொடுத்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், ரவிராஜ் போன்றோர்கள் படுகொலை செய்யப்பட்டனரே தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை யாராலும் உடைத்துச் சின்னாபின்னமாக்க முடியாமல் போனது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கான பல சதிவேலைகள் நடத்தியும் அந்தச் சதிவலையில் நாம் சிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பணத்திற்கோ சலுகைக்கோ சோரம்போகாமல் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக இருப்பதுடன், தமிழர்களுக்கான நிலையான ஓர் அரசியல் தீர்வை எதிர்பார்த்தே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பயணம் சென்று கொண்டிருக்கின்றதே தவிர பணத்திற்கோ பதவிக்கோ அடிபணியாதவர்களாகவே இருந்துகொண்டு இருக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய - இலங்கை உறவுகளில் குழப்பம்; முத்திரை வெளியீடு இடைநிறுத்தம்!



கொழும்பு, டிசெ. 25

ரஷ்ய- இலங்கை இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்ட 60 ஆவது ஆண்டை முன்னிட்டு, இலங்கை அரசால் வெளியிடப்பட விருந்த சிறப்பு அஞ்சல்தலை (முத்திரை) வெளியீடு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் விநியோகிக்கத்திட்டமிடப்பட்டிருந்த இந்த அஞ்சல் தலையை இடை நிறுத்தி வைக்கு மாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தி யிருக்கிறது என அஞ்சல் மா அதிபர் றோகண அபேரத்ன தெரிவித்தார்.

எனினும், அதற்கான காரணங்களை வெளியிட அவர் மறுத்துள்ளார்.

இலங்கையின் தேயிலைக்கு ரஷ்யா தற்காலிக தடையை விதித்துள்ள நிலையில், இருதரப்பு இராஜ தந்திர உறவுகளில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ள சூழலிலேயே, சிறப்பு அஞ்சல்தலை வெளியீடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையுடனான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்ட 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இரண்டு அஞ்சல் தலை களை ரஷ்யா கடந்த வாரம் வெளியிட்டுள்ளது.

# சிவனொளிபாத மலைக்கு சென்றோரிடம் கஞ்சா மீட்பு!



கொழும்பு, டிசெ. 25

சிவனொளிபாத மலையைத்தரிசிப்பதற்காகச்சென்ற 10 பேரிடமிருந்து ஒரு தொகை கஞ்சா பொதிகள் மற்றும் சட்டவிரோத சிகரெட் பக்கெற்றுக்கள் என்பன நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளன.

ஹட்டன் குற்றத்தடுப்பு விசேட பிரிவால் 'கோரா' என்ற மோப்ப நாயின் உதவியுடன் இந்தப் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் காலி பிரதேசங்களிலிருந்து சிவனொளிபாத மலையைத் தரிசிப்பதற்காகச் சென்றவர்களிடமிருந்தே மேற்படி கஞ்சா பொதி களும் சிகரெட்டும் கைப்பற்றப்பட்டன.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத் தேனை தியகல பகுதியில் நேற்று முன்தினம் மாலை பதினைந்து வாகனங்களைத் திடீரென அட்டன் குற்றத் தடுப்பு விசேட பிரிவினர் சோதனை செய்தனர்.

இதன்போது வெவ்வேறு மூன்று வாகனங்களில் பயணித்த ஒன்பது பேரிட மிருந்து பதினோராயிரம் மில்லிகிராம் கஞ்சா பொதிகளும் ஒருவரிடமிருந்து இரண்டு சிகரெட் பக்கெற்றுக்களும் கண்டுபிடிக்கப் பட்டன.

இதனையடுத்து, இந்த பத்துப் பேரையும் கைது செய்த அட்டன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினர், ஹட்டன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

# தேர்தல் பிரசாரம் தொடர்பில் இறுதித் தீர்மானம் இந்த வாரம்!



கொழும்பு, டிசெ. 25

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் உடன்பாட்டுடன் பொது வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து அதனடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார நடவடிக் கைகளை முன்னெடுப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

அது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூடி ஆராய்ந்த பின்னர் இறுதி வரைவு அடுத்தவாரம் வெளியிடப் படவுள்ளது எனக் கூட்டு எதிர்க்கட்சி யில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன் றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான சகல வேலைத் திட்டங்களும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சி களுக் கிடையில் அது தொடர்பிலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டி யிடுவதற்கு வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளது.

எனினும், அவற்றில் பதினொரு வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஆகவே, அதற்கெதிராக நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடும் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குச் சீட்டு அச்சிடும் பணி ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 25

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்குச் சீட் டுக்கள் அச்சிடும் பணி, அரச அச்சகத் திணைக் களத்தில் கடுமையான பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச அச்சகத்தில் தனியான பாதுகாப்பான ஒரு பிரிவு இந்த அச்சுப் பணியை மேற்கொள்கிறது எனக் குறிப்பிடப்படுகின்றது.

முதலில் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்ட 93 உள்ளூராட்சி சபைகளின் வாக்குச் சீட்டுக்கள் முதலில் அச்சிடப்படுகின்றன எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பகுதிக்கான பணிகள் நிறைவடைந்த பின்னர் எஞ்சிய 248 சபைகளுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படவுள்ளன எனவும் கூறப்படு கின்றது.

# பண்டிகைக் கால பாதுகாப்பு; 4,300 பொலிஸார் பணியில்!

கொழும்பு, டிசெ. 25

பண்டிகைக் கால பாதுகாப்புக் கடமையில் 4 ஆயிரத்து 300 பொலிஸாரை ஈடுபடுத்தியுள் ளோம் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது.

சீருடை தரித்த நிலையில் 2 ஆயிரத்து 800 பொலிஸாரும், சீருடை தரிக்காத நிலையில் 300 பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர்.

அத்துடன், வாகனப் போக்குவரத்தைச் சீர்செய்யும் பணியில் ஆயிரத்து 200 பொலிஸார் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் நகரங்களில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட வேலைத் திட்டம் ஒன்றும் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

மேலும், வாகனங்கள் மற்றும் சன நெருக்கம் உள்ள பிரதேசங்களில் பயணிக்கும் போது பணம், ஆபரணங்கள் மற்றும் பெறுமதிவாய்ந்த பொருள் களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களை வேண்டிக்கொண் டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் மதுபானம் அருந்திய நிலையில் வாகனம் ஓட்டுவதால் அதிகளவான விபத்துகள் சம்பவிக்கின்றமையால் அதனைக் குறைக்கும் வகையில் அவ்வாறானவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.

# கொலன்னாவ பகுதியில் எரிபொருள் களஞ்சியம்!



கொழும்பு, டிசெ. 25

கொலன்னாவ பிரதேசத்தில் பெற்றோலிய கூட்டுத்தாபனத் திற்குச் சொந்தமான எரி பொருள் களஞ்சிய நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இது பத்து தாங்கிகளை உள்ளடக்கியதாகும்.

ஆயிரத்து 200 மெற்றிக் தொன் கொள்ளவைக் கொண்ட மூன்று தாங்கிகளும், ஆயிரத்து 900 மெற்றிக் தொன் விமான எரிபொருளைக் கொண்ட தாங்கியும் , 12 ஆயிரத்து 600 மெற்கிக் தொன் டீசலைக் கொண்ட தாங்கியும், ஐயாயிரத்து 600 மெற்றிக் தொன் டீசல் அடங்கிய மூன்று தாங்கி களும், ஐயாயிரத்து 600 மெற்றிக் தொன் மண் ணெண்ணெய் தாங்கியும், இதில் அடங்கும்.

கடந்த 2009 ஆம் ஆண்டின் பின்னர் இலங் கையில் பெற்றோல் பாவனை 90 சத வீதத்தால் அதிகரித்துள்ளது என அமைச்சர் அர்ஜுண ரண துங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# மன்னார் – வவு. வீதி விபத்தில் சிக்குண்டதில் மாடு உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 25

மன்னார் - வவுனியா பிரதான வீதியில், நெளுக்குளம் தொழில்நுட்ப கல்லூரியின் முன்பாக நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் மாடொன்று பலியாகியுள்ளது.

வீதியில் நின்ற குறித்த மாட்டை ஒரு வாகனம் மோதித் தள்ளிய போது சத்தம் கேட்டது எனவும், ஓடி வந்து பார்ப்பதற்குள் அந்த வாகனம் நிற்காமல் சென்றுவிட்டது எனவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தமக்கு இந்த வாகனம் தொடர்பான தகவல்கள் எவையும் தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை மன்னார் - வவுனியா பிரதான வீதியில் இரவு நேரங்களில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## தினசரி ராசி பலன் 25.12.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் திங்கட்கிழமை ஸப்தமித் திதி பி.இ. 2.43 மணிவரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம் பூரட்டாதி பி.இ. 1.09 மணிவரை. பின்னர் உத்தரட்டாதி. மரணயோகம் பி.இ. 7.51 மணிவரை. பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** - காலை 7.32 மணிமுதல் 9.17 மணிவரை.

**சுபநேரம்** - பகல் 12.32 மணிமுதல் 2.02 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- மார்கழி மாத வளர்பிறை ஸப்தமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** பூரட்டாதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். புகழ்பெற்ற மனிதர்கள், அரசியல்வாதிகள் மூலம் நன்மை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி நிலவும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**ரிஷபம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தியடையும். வியாபாரம் நன்கு விருத்தி அடையும். சுய தொழிலில் முன்னேற்றமும், ஆதாயமும் பெருகும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**மிதுனம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். அரசியல்வாதிகளின நட்பு சில அனுகூலங்களைப் பெற்றுத்தரும். தொழில் துரித வளர்ச்சி அடையும். குடும்பத்தில் பாசமும், நேசமும் நிறைந்திருக்கும்.

**கடகம்:** தீமையான நாள். வருமானம் குறையும். உத்தியோகத்தில் வேலைச்சுமையும் பொறுப்புகளும் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும். குடும்பத்தில் புரிந்துணர்வு குறையும்.

**சிம்மம்:** மத்திமமான நாள். வரவும், செலவும் சமமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். தேகசுகம் பாதிப்படைந்து மருத்துவச் செலவுகள் உண்டாகும். யாருக்கும் பிணை போக வேண்டாம்.

**கன்னி:** இனிமையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். உறவினர் சந்திப்பு மகிழ்ச்சி தருவதுடன் சுபகாரியம் நடைபெறுவதற்கு வழி உண்டாகும்.

**துலாம்:** யோகமான நாள். பணபலம், மனபலம் அதிகரிக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு தனிப்பட்ட சலுகைகளும் நற்பலன்களும் கிடைக்கும். சிலருக்குப் புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்:** அதிஷ்டமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். சிலருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக் கிட்டும். வேலை தேடுவோருக்கு குருட்டு அதிஷ்டம் தேடிவரும்.

**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர் கடும் முயற்சியால் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவர்.

**மகரம்:** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். தொழிற்பிரிவினர் திருப்தியடையக்கூடிய வகையில் தொழில் முன்னேற்றம் சிறப்பாக அமைந்திருக்கும். சகோதர உறவு பலப்படும்.

**கும்பம்:** இன்பமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்றுசேரும். பெண்களுக்கு விரும்பிய மணவாழ்க்கை அமையும்.

**மீனம்:** சலனம் மிகுந்த நாள். வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுக்கு வழிவகுக்கும். குடும்பத்தில் குழப்பநிலை காணப்படும்.

சந்திராட்டமநாள்: புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் தோன்றியோர் இன்று சுபகருமங்கள் ஆரம்பிக்கின்றமையைத் தவிர்க்கவும்.

# கடந்த தேர்தல்களில் வன்செயலில் ஈடுபட்டோருக்கு எதிரான வழக்குகள் இதுவரை முடிவடையவில்லை!



கடந்த முறை இடம்பெற்ற மாகாண சபை, மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின்போது வன்செயலில் ஈடுபட்ட சந்தேக நபர்களுக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்குகள் இன்னமும் முடியவில்லை என்பதை புதிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மனதிலிருத்திக்கொள்ள வேண்டும் என ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டருமான சிந்தக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் நகர சபை மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்காகத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு புதிய தேர்தல் சட்ட விதிமுறைகளைப் பற்றித் தெளிவுபடுத்தும் சந்திப்பு, ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

அங்கு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் மத்தியில் சட்டம், ஒழுங்கைக் கடைப்பிடிப்பதன் அவசியம் பற்றி ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தொடர்ந்து வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த தேர்தல்கள் இடம்பெற்று காலங்கடந்துள்ள போதிலும் தேர்தலின்போது வன்செயலில் ஈடுபட்டவர்களுக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்குகள் இன்னமும் முடியவில்லை.

இத்தகைய சூழ்நிலையை தற்போது தேர்தலில் ஈடுபடும் வேட்பாளர்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

இது ஒரு புதுமையான புதிய தேர்தல் சட்டங்களைக் கொண்ட தேர்தலாகும். இதன் அடிப்படையில் புதிய தேர்தல் சட்டங்களை அறிந்துகொண்டு சட்டம் ஒழுங்கைக் கடைப்பிடிக்குமாறு வேட்பாளர்களைத் தெளிவுபடுத்த வேண்டும் என நாம் பணிக்கப்பட்டுள்ளோம்.

இந்தத் தேர்தலோடு மட்டும் நிற்காமல் ஜனநாயக முறையில் நேர்மையாக நடந்து அடுத்தடுத்து வரும் மாகாண சபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் வேட்பாளர்களாகிய நீங்கள் முகங்கொடுக்க வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

மாறாக, சட்டம் ஒழுங்கை மீறி, அநாவசிய குழப்பங்களை ஏற்படுத்தி, மக்களது இயல்பு வாழ்க்கையைக் குழப்பி, சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தி கைது செய்யப்பட்டு நீண்ட காலம் நீங்கள் வழக்குகளுக்கு முகம் கொடுத்து தவறானவர்களாகத் தண்டிக்கப்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

இது ஒரு குறுகிய வட்டாரத் தேர்தல். எனவே, அடக்கமாக அமைதியாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட முடியும். எதிர்த்துப் போட்டியிடும் அடுத்த வேட்பாளருக்கு அச்சுறுத்தல் இல்லாத வகையில் அமைதியாக நடந்துகொள்ள வேண்டும். தேர்தலில் தாம் சார்ந்த கட்சிக்கோ சுயேச்சைக் குழுவுக்கோ ஆதரவு கோரிப் பணம், பொருள், சன்மானம், உபசரணை, சலுகை, அளித்தல் ஆகாது.

கட்சிக்கோ சுயேச்சைக் குழுவுக்கோ ஆதரவைத் திரட்டும் வகையில் வாக்காளர்களுக்கு உண்ணபரிசு கொடுத்தல், உணவுப் பண்டங்கள் விநியோகித்தல், விநியோகிக்க நடவடிக்கை எடுத்தல் என்பனவும் எதிர்த்தரப்பினருக்கு அச்சத்தை ஏற்படுத்தல், தடுத்தல், வாக்களிக்க அச்சுறுத்தல் விடுத்தல், லஞ்சம், பணமோ பொருளோ தேர்தலுக்கான ஆதரவுக்காக கடனாகக் கொடுத்தல் என்பவையும் குற்றச்செயல்களாகும். இவைகளைத் தவிர்த்து நீங்கள் என்ன செய்ய உத்தேசித்துள்ளீர்கள் என்பதைத் தெளிவுபடுத்தினாலேயே போதும்.

எனவே, வட்டாரத்தை அபிவிருத்தி செய்வது என்ற நோக்கத்தின் அடிப்படையில் நீங்கள் தேர்தலில் குதித்தால் வன்முறைகளைத் தவிர்த்து அதனை மக்களுக்குத் தெளிவுபடுத்துங்கள். மக்களது இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்காத வண்ணம் நீங்கள் பிரசாரத்தில் ஈடுபடலாம்.

இங்கு நாம் வலியுறுத்திய சட்டத்தைத் தெளிவுபடுத்துவது உங்களை சிக்கலில் இருந்து காப்பதற்குத்தான் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் செங்கலடி, ஏறாவூர் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றனஎனநேரடியாக தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்திருந்தார்கள். அதனையொட்டியே நாம் நடவடிக்கை எடுப்போம். சட்டத்தை மீறுவோரை நீதிமன்றில் நிறுத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை ஜெருசலேமுக்கு ஆதரவு வழங்கியமையால் 870 கோடி ரூபா இழப்பு!

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஜெருசலேம் யோசனைக்கு எதிராக இலங்கை வாக்களித்தமையால் 870 கோடி ரூபா இழப்பு ஏற்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவுக்கு எதிராக வாக்களித்த அனைத்து நாடுகளுக்கும் வழங்கப்படும் உதவித் தொகைகளை நிறுத்தப் போகின்றேன் என டிரம்ப் ஐ.நா. கூட்டத்தில் வைத்தே எச்சரித்திருந்தார்.

இது தவிர அமெரிக்காவால் இலங்கைக்கு வேறு வகையிலான உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த உதவிகளும் எதிர்வரும் நாள்களில் நிறுத்தப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளன.

# 600 இடங்களில் WiFi வசதிகள்!

கொழும்பு, டிசெ. 25

நாட்டில் புதிதாக 600 இடங்களில் WiFi வசதிகள் வழங்கப்பட்டுள்ளன என இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் இரண்டு லட்சத்து 45 பேர் இணைய சேவையைப் பெற்றுக்கொள்கிறனர்.

இணையத்தை பயன்படுத்தி அன்றாட வாழ்வின் செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்ளும் முயற்சியின் ஓர் அங்கமாக பொது இடங்களில் WiFi வசதிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 46

தமிழர் நாடறிந்த இலக் கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உரு வெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுர மாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



### நீண்ட இடைவெளியின் பின் ஒன்பதாவது கம்பன் விழா 01.08.1986

**பொன். சுந்தரலிங்கம் வாக்கு மாறினார்**

அந்த ஒலிப்பதிவு நாடாக்களை, கம்பன் கழகத்தின் பெயரில் வெளியிட வேண்டும் என, எம்மைச் சுந்தரலிங்கம் வலிந்து கேட்டதால், நாம் அதற்குச் சம்மதித்திருந்தோம். பத்திரிகையிலும் கம்பன் கழக வெளியீடாய், திருமுறை ஒலிநாடாக்கள் வரப்போவதாய் விளம்பரம் வந்தது. இக்காலத்தில்தான் யாழ்ப்பாணத்தில், 'முரசொலி' எனும் பத்திரிகையை, மு.சிவராஜா என்பவர் ஆரம்பித்திருந்தார். அக்காலத்தில் அவர் மிக வசதியோடிருந்தார். கலைஞர்களுக்கு உதவுவதில் விருப்பங்கொண்டிருந்தார். ஆதீனத்தோடு நெருக்கமாயிருந்த அவர், எங்கள் கம்பன் விழாவில் வைத்து, பொன். சுந்தரலிங்கத்தோடு அறிமுகமாகி, ''திருமுறை நாடாக்களை, ஆதீனத்தின் பெயரில்தான் வெளியிடவேண்டும்'' எனக் கேட்டுக்கொள்ள, சுந்தரலிங்கமும் அவரினால் வரும் பயனைக் கருதி, அப்படியே வெளியிடச் சம்மதித்துவிட்டு, அத்தவறுக்காக எங்களைச் சமாளிக்க முயன்றார். நாங்கள் சுந்தரலிங்கத்தின் நட்பைக் கருதி, அந்த விடயத்தை அதிகம் பெரிதுபடுத்தவில்லை. அவ்வெளியீட்டு முயற்சியின் போது, நாம் வாடகைக்கிருந்த வசதியில்லாத அறையிலிருந்தபடியே, ரியசலில் கலந்துகொண்ட கலைஞர்களுக்கு, சமையல் செய்து நான் அனுப்பி வைப்பேன்.

* * *

**கவிஞர் சோ.பவின் தொடர்பு**

இவ்விடயத்தில் கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களுடனான, கழகத்தின் உறவு பற்றிச் சொல்ல விரும்புகிறேன். உரும்பிராயில் வித்துவான் வேலன் தலைமையில் நடைபெற்ற, ஒரு பட்டிமண்டபத்தில் சோ.ப. பேச, அதைக் கேட்டு மகிழ்ந்த வித்துவான் வேலன், கம்பன் விழாவில் அவரைப் பயன்படுத்துமாறு எங்களைக் கேட்டுக் கொண்டார். அவரின் ஆலோசனைப்படி, ஒரு கம்பன் விழாவில் சோ.பவை அறிமுகம் செய்தோம். அப்பொழுது சோ.ப. பெரிய அளவில் பிரபலமாகி இருக்கவில்லை. கம்பன் விழாக் கவியரங்கங்களில் சோ.ப. தன் திறமையைக் காட்டி, கொடிகட்டிப் பறக்கத் தொடங்கினார். நல்ல தமிழறிவு, திறமையான கவியாற்றல், ஆங்கிலப் புலமை என அனைத்தும் சேர, அவர் திறமை பெரிதும் வெளிப்பட்டது.

அக்காலத் தில், அவர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில், விரிவுரையாளராய் இருந்தார். அப்போது அவருக்கு லண்டன் 'ஸ்கொலசிப்' வாய்ப்பு ஒன்று வந்தது. அவரிடம் அப்போது 'பாஸ்போட்' இருக்கவில்லை. அக்காலத்தில் 'பாஸ்போட்' எடுப்பதானால், அரசாங்க உயர் உத்தியோகத்தர் ஒருவர், அத்தாட்சிப்படுத்திக் கையொப்பம் இட வேண்டும். சோ.பவுக்காக நானே கொழும்பு சென்று, எனது சின்னையா ஒருவரைக் கொண்டு, கையொப்பம் இடுவித்து 'பாஸ்போட்' எடுத்து வந்தேன். வந்த ஒரு வாரத்தில் பாஸ்போட்டோடு வருமாறு, சோ.பவுக்குத் தூதரகத்திலிருந்து கடிதம் வந்தது. 'பாஸ்போட்' கையிலிருந்ததால், சோ.பவுக்கு அந்த 'ஸ்கொலசிப்' கிடைத்தது. இல்லாவிட்டால் அந்த வாய்ப்பை அவர் இழந்திருப்பார்.

லண்டன் போக சோ.பவுக்கு மற்றொரு பிரச்சினையும் இருந்தது. வீட்டைப் பொறுப்பாகப் பார்க்க, அவருக்கு நெருக்கமான உறவு இருக்கவில்லை. பிள்ளைகள் சிறியவர்கள், மனைவியால் தனியே பொறுப்புகள் சுமக்கமுடியாத நிலை, இந்நிலை யில் மாதாமாதம் கோண்டாவில் சென்று, அவர் குடும்ப காரியங்களைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை, அவரின் வேண்டுகோளையேற்று, நானும் குமாரதாசனும் ஓர் ஆண்டு செயற்படுத்தினோம். பரிசுப் பொருட்கள் பலவற்றை (அவர் பணத்தில்) வாங்கிக் கொடுத்து, லண்டனில் அவருடைய ஆங்கில விரிவுரையாளர்களுக்கு வழங்கி, அவர்களுடைய அன்பைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறி, அனுப்பிவைத்தோம். அப்போது லண்டனில் அவருக்கு யாரையும் தெரிந்திருக்கவில்லை. எங்கள் நண்பன் சிவகுமாரை அவருக்கு அறிமுகம் செய்து, லண்டனில் துணைசெய்யச்செய்தோம். இப்படி சோ.பவுக்கும் எங்களுக்குமான உறவு, சகோதர உறவாய் நெருங்கித் தொடர்ந்தது. லண்டன் சென்று வந்ததும், சோ.பவுக்கு யாழ்ப்பாணத்தில் மதிப்பு அதிகரித்தது. பின்னாளில் எங்கள் பணிவைப் புரிந்துகொள்ளாத சோ.ப., அதைப் பலவீனமாய்க் கருதி எங்களை அலட்சியம் செய்தார். பயன் கருதித் தனக்குத் துணை செய்தவர்களுக்கெல்லாம், பணிந்து நடந்தார். தன்னை ஏவியவர்களுக்கெல்லாம் பணிவிடை செய்து, பணிந்த எங்களை ஏவ முயற்சித்தார். அது பற்றிப் பின் சொல்கிறேன்.

* * *

**சமாதானப் படையின் சன்னதம்**

தமிழர்களின் சார்பாய் இலங்கை வந்த இந்திய சமாதானப் படைக்கு, தமிழர்கள் மத்தியில் ஆரம்பத்தில் பெரிய வரவேற்பு இருந்தது. யாழ்ப்பாணம் வந்த ஓர் இந்திய சமாதானப் படைவீரன், யாழ். கோட்டை அருகில் கண்ணிவெடி அகற்றும் போது நிகழ்ந்த, வெடி விபத்தில் இறந்துபோக, அவருக்காக யாழ். மக்கள் மனமுருகிக் கண்ணீர் வடித்தனர். ஆனால், பின்னாளில் அரசியல் சூழல்களால், புலிகளுக்கும் இந்திய சமாதானப் படைக்கும் போர் தொடங்கிற்று. நாம் அதுவரை யாழில் கண்டிருந்த போரை விட, இப்போர் மிகக் கொடூரமாய் இருந்தது. மக்களின் பாதுகாப்பைப் பற்றி எதுவித கவலையுமின்றி, இருதரப்பினரும் மிகக் கடுமையான 'ஷெல்' தாக்குதல்களை நடத்தினர். மாரி மழைபோல 'ஷெல்' பொழிந்தது. பலரும் இடம்பெயர வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

இந்திய இராணுவ வருகையின் போது நடந்த, சில நிகழ்ச்சிகள் மறக்கமுடியாதவை. 1987 ஒக்ரோபர் மாதமளவில், புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையிலான பகை தொடங்கிற்று. அப்போது நாங்கள் வைமன் ரோட் அலுவலகத்தில் இருந்தோம். பயங்கரமாய்ச் சண்டை நிகழ்ந்தது. பேராசிரியர் சண்முகதாஸ், அவரின் மாமனார், அவருடைய மைத்துனி குடும்பத்தினர், கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை குடும்பத்தினர், பேராசிரியர் டாக்டர் பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர், எங்கள் கழக உறுப்பினர் விமலா குடும்பத்தினர் எனப் பலரும், அச்சண்டைக்குப் பயந்து, எங்கள் கழக அலுவலகத்தில் பல நாட்கள் தங்கியிருந்தனர்.

### இந்திய இராணுவம் யாழினுள் புகுந்தது

நூற்றுக்கணக்கான 'ஷெல்கள்' விசில் சத்தத்துடன் ஆகாய வழியாக வரும். நாமனைவரும் அச்சத்தைக் கேட்டதும், நிலத்தில் விழுந்து குப்புறப் படுத்துக் கொள்வோம். வந்த 'ஷெல்கள்' விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்ததன் பின்தான், அந்தச் 'ஷெல்கள்' எம்மேல் விழவில்லை என்பதையறிந்து நிம்மதிப்படுவோம். போர் முற்றி இந்திய இராணுவம் முன்னேறிவர, நல்லூர் வட்டார மக்களனைவரும் நல்லூர்க் கோயிலில் தஞ்சம் புகுந்தனர். நாங்களும் கோயிலுக்குச் சென்று, அங்கு இடமில்லாதிருந்ததால், அரைகுறையாய்க் கட்டப்பட்டிருந்த, அருகிலிருந்த எங்கள் கம்பன் கோட்டத்துக்குள் தஞ்சமடைந்தோம்.

அப்பொழுது என் தாய், தந்தை, தங்கை ஆகியோர், நல்லூர்ப் பின் வீதியில் எங்கள் கம்பன் கோட்டத்துக்கு முன்னால் இருந்த, நல்லலக்ஷ்மி ஒழுங்கையில் வாடகை வீட்டில் இருந்தனர். இந்திய இராணுவம் ஒக்ரோபர் 24 இல் நல்லூருக்குள் புகுந்தது. அன்று எனது பிறந்த நாள். அது ஒரு விடியற்காலை நேரம். எங்கும் நிசப்தம். அப்போது கேட்ட இராணுவச் சப்பாத்துச் சத்தங்களால், இராணுவம் உள்நுழைந்துவிட்டது என்பதைத் தெரிந்துகொண்டோம். மனதுக்குள் நடுக்கம். பலகாலம் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்துவிட்டு, அப்போதுதான் அதிலிருந்து விலகியிருந்த, எங்கள் நண்பன் ஈஸ்வரநாதனும் எங்களோடு அப்போது தங்கி இருந்தான். இயக்கத்தின் சில நடவடிக்கைகளால் மனக்கசப்புற்றிருந்த அவனை, இயக்கத்திலிருந்து விடுவிக்க நானும் துணைசெய்தேன். அவனையும் பாதுகாக்க வேண்டும் எனும் பதற்றம் எங்களுக்கு.

* * *

(தொடரும்...)

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"




**ட்ரம்பின் உரையை அடுத்து, அல் கொய்தா போன்ற இஸ்லாமிய குழுக்கள் மதவாத உணர்வுகளுக்கு முறையிட்டு வருகின்ற நிலையில், அமெரிக்க கொள்கை மாற்றம் புதிய பயங்கரவாதத் தாக்குதல்களைத் தூண்டும் என்று எண்ணற்ற எச்சரிக்கைகள் வந்துள்ளன. ஐயத்துக்கு இடமின்றி, இவை அமெரிக்க இராணுவம் மற்றும் உளவுத்துறை எந்திரத்தின் கணக்கீடுகளுக்குள் காரணிகளாக இருந்து வருகின்றன. இவை எந்தவொரு புதிய பயங்கரவாத நடவடிக்கையும் வெளிநாடுகள் மீது - குறிப்பாக ஈரானுக்கு எதிராக - போர் தொடுக்கவும், மற்றும் உள் நாட்டில் ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தவும் சாக்கு போக்காகப் பற்றிக் கொள்ளப்படும்.**





நடைமுறையளவில் ஒவ்வொரு அரபு ஆட்சியும், அத்துடன் மேற்கு ஐரோப்பாவில் உள்ள வொஷிங்டனின் பெயரளவுக்கான கூட்டாளிகள் அனைத்தும் உள்ளடங்கலாக, ட்ரம்பின் உரை ஏறத்தாள உலகெங்கிலும் இருந்து கண்டனங்களை எதிர்கொண்டது.

ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கம், வொஷிங்டனின் இந்த ஆத்திரமூட்டும் ஒருதலைபட்சமான நகர்வை, தங்களின் எல்லைகளுக்குள் முஸ்லீம் மக்களைக் கிளர்ந்தெழச் செய்து, அத்துடன் ஈரானின் ஆதாயமுள்ள முதலீடுகள் மற்றும் சந்தைகளை அணுகுவதைத் தடுக்கும் ஈரான் - விரோத கொள்கையை விரிவாக்கி, தனது நலன்களுக்கு குறுக்காக வெட்டுவதாக காண்கிறது. அதேநேரத்தில், ஐரோப்பிய ஆளும் வர்க்கங்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் இராணுவ வழிவகைகள் உட்பட அவற்றின் சொந்த சுதந்திரமான வல்லரசு நலன்களைப் பின்தொடர்வதற்கு ட்ரம்பின் நகர்வை ஒரு நியாயப்பாடாக பயன்படுத்தும் என்பதை, குறிப்பாக ஜேர்மன் மற்றும் பிரெஞ்சு அரசுகளின் விடையிறுப்புகளில் இருந்து தெளிவாகிறது.

அரபு ஆட்சிகளைப் பொறுத்தவரையில், போராட்டங்கள் முன்பினும் அதிகமாக போலித்தனமாக உள்ளன. சவூதி முடியாட்சி, தளபதி சிசி இன் எகிப்திய பொலிஸ் அரசு சர்வாதிகாரம், ஜோர்டானின் ஹஷெமியத் (Hashemite) முடியாட்சி மற்றும் மஹ்மத் அப்பாஸியின் பாலஸ்தீன ஆணையம் (PA) ஆகிய அனைத்துக்கும், ஜெருசலேம் மீதான அமெரிக்க கொள்கை மாற்றம் குறித்து முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டிருந்தது.



ஜெருசலேம் மொத்தத்தையும் மற்றும் மேற்குகரை குடியமர்வுகள் மொத்தத்தையும் இஸ்ரேலிய கரங்களில் விட்டுக்கொடுத்து, பாலஸ்தீன அகதிகளுக்கான திரும்பி வரும் உரிமையை மறுத்து, பாலஸ்தீன 'அரசை' இஸ்ரேலிய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் எல்லைகளைக் கொண்ட ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பன்துஸ்தான்களின் ஒரு துண்டு நிலப்பகுதி யாக குறைக்கும் அமெரிக்க - இஸ்ரேலிய 'சமாதான' வரையறைகளை அவருக்கு கட்டளையிடவே, மகுடம் தரிக்க உள்ள சவூதியின் இரும்பு மனிதர் இளவரசர் மொஹம்மத் பின் - சல்மான், அப்பாஸை கடந்த மாதம் அழைத்திருந்தது என நம்பகமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஒன்று இந்த பயங்கரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது 'நீக்கப் படுவார்.' அதாவது அவரது பாலஸ்தீன ஆணையம் சார்ந்திருக்கும் சவுதியின் பணம் வெட்டப்படுமென அப்பாஸிக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக செய்திகள் குறிப்பிடுகின்றன.

**கடந்த 70 ஆண்டுகளில் பல முறை பாலஸ்தீனர்களைக் காட்டிக்கொடுத்துள்ள அரபு ஆட்சிகளுக்கு, ட்ரம்ப் மற்றும் நெத்தனியாகுவை எதிர்க்க எந்த ஆர்வமும் இல்லை. சவூதி அரேபியா மற்றும் பிற பிற்போக்குத்தனமான சுன்னி வளைகுடா முடியாட்சிகள் ஈரானுக்கு எதிராக அவற்றுடன் இணைந்திருக்க விரும்புகின்றன.**



ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காசா துண்டுப் பகுதியில் அரசமைப்பை பகிர்ந்து கொள்வதன் மீது பாலஸ்தீன ஆணையத்துடன் பேரம்பேசி வரும், இஸ்லாமியவாத பாலஸ்தீன குழுவான ஹமாஸூம் இதிலிருந்து எந்த விதத்திலும் வித்தியாசப்பட்டதில்லை. ட்ரம்பின் முடிவு 'நரகத்தின் கதவுகளைத் திறந்துவிடும்' என்று எச்சரிக்கின்ற அதுஇ ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் இஸ்ரேலுடன் ஓர் உடன்பாட்டை எட்ட முயன்று வரும் அதேவேளையில் மத அடிப்படைவாதத்தில் தன்னைத் தானே உருமறைத்து கொண்டு, வெறுமனே பாலஸ்தீன முதலாளித்துவத்தின் மற்றொரு கன்னையைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

நெத்தனியாகு ட்ரம்பின் முடிவை ஒரு 'வரலாற்று மைல்கல்' என்று பாராட்டினாலும், யதார்த்தத்தில் அது பல தசாப்தங்களாக பாலஸ்தீன மக்கள் மீதான ஒடுக்குமுறையை மூடிமறைக்கவும் மற்றும் நியாயப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள, 'சமாதான நிகழ்முறை', 'இரண்டு-அரசு தீர்வு' என்றெல்லாம் அறியப்படும் அரசியல் கட்டுக்கதைகளின் சவக்குழி மீது எழுப்பப்பட்ட வெறும் ஒரு கல்லறைக் கல்லாக விளங்குகிறது.

ஏகாதிபத்தியத்திற்கும் அரபு முதலாளித்துவ ஆட்சிகளுக்கும் இடையிலான உடன்படிக்கைகள் மற்றும் தந்திரோபாயங்கள் மூலமாக பாலஸ்தீன மக்களின் அபிலாஷைகளை அடைய முடியும் மற்றும் அவர்கள் மீதான சியோனிச அரசினது ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்ற வாதங்களின் மோசடித்தன்மையையே, ட்ரம்பின் நடவடிக்கை -மீண்டுமொரு முறை- அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது.

தொடர்ந்து நடந்து வரும் பல்வேறு போர்கள் மற்றும் அதிகரித்து வரும் இஸ்ரேலிய-பாஸ்தீன பதட்டங்கள் ஆகியவற்றால் குறிக்கப்பட்ட, அதிகரித்து வரும் மத்திய கிழக்கு நெருக்கடி, முதலாளித்துவ தேசியவாதத்தின் வரலாற்றுதிவால்நிலையை அம்பலப்படுத்துகிறது.

அதன் சியோனிச வடிவத்தில், யூத இனப்படுகொலை பயங்கரங்களில் இருந்து தப்பியோடிய யூதர்களுக்கு ஒரு சொந்த நாட்டை நிறுவுவது என்ற அடித்தளத்தில் அதன் சட்டபூர்வத்தன்மை கோரப்பட்டது. ஆனால் அதற்கு பதிலாக, யூத மக்களைப் பாலஸ்தீனர்களுக்கும் மற்றும் அப்பிராந்தியத்தின் ஏனையவர்களுக்கும் எதிராக நிறுத்தி, காலனித்துவவாதம் மற்றும் விரிவாக்கவாதம் என்ற அடித்தளத்தில் அது ஓர் இராணுவமயப்பட்ட அரசை உருவாக்கி உள்ள அதேவேளையில், இப்புவியின் முன்னால் மிகவும் சமநிலையற்ற சமூகங்களில் ஒன்றுக்குத் தலைமை தாங்குகிறது. லியோன் ட்ரொட்ஸ்கி எச்சரித்ததைப் போல, இந்த அரசின் உருவாக்கமானது யூத மக்களுக்கு வைக்கப்படும் ஒரு 'இரத்தந் தோய்ந்த பொறியாக' நிரூபணமாகிறது.

(கேள்வி தொடரும்...)

# நத்தார் சிறப்பிதழ்

## ஜனாதிபதி மைத்திரியின் நத்தார் வாழ்த்துச் செய்தி



கோலாகலமான உலக பண்டிகையான நத்தார் கொண்டாட்டங்களுடன் இணைந்து அதனைக் கொண்டாடும் நம் நாட்டின் கிறிஸ்தவ சகோதரர்களுக்கு எனது நத்தார் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது செய்தியில் –

தெய்வீகத்தன்மையும் மனிதாபிமானமும் சந்தித்துக்கொள்ளும் ஓர் அபூர்வ நிகழ்வாக அன்று முதல் இன்று வரை நத்தார் பண்டிகை மானிட வரலாற்றில் முக்கிய பங்கினை வகித்து வருகின்றது.

விவேகமும் சமத்துவமும் அற்ற, குரூரத்தனம் வேரூன்றியிருந்த காலப்பகுதியிலேயே இயேசு பிரான் இந்த பூமியில் அவதரித்தார். அவர் தெய்வீக வரம் பெற்றவராக இந்த பூமியில் பிறந்திருந்தபோதிலும், சமூகத்தின் தீமையினை நீக்குவதற்கான வழிகாட்டுதலை ஒரு சாதாரண மனிதர் தமது வாழ்வில் எதிர்நோக்க நேரிடும் அனைத்து இடையூறுகளையும் அனுபவித்தவாறே அவர் உலக மக்களுக்கு வழங்கினார். இதனாலேயே மனிதாபிமானத்தின் ஆழத்தையும் அதில் இருக்கவேண்டிய முன்மாதிரியான குணங்களையும் உலக மக்கள் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது.

தற்கால உலகமக்கள் எதிர்நோக்கியிருக்கும் பெரும் சவால்களுக்கான தீர்வுகளைக் காண்பதற்கான வழிமுறையும் அதனுள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் விடை காணமுடியும் என்பதே அங்கு தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றது. ஏனையவர்களின் மீது காட்டும் இரக்கம், கருணை ஆகியன தமக்கு வெற்றியைத் தருவதுடன், ஒட்டுமொத்த மனித வர்க்கத்தையே சகவாழ்வை நோக்கி இட்டுச் செல்லும் என்பதும் தெளிவாகின்றது.


மனிதநேயத்திற்கு எதிராக எழுந்து நிற்கும் சகல ஆயுதங்களையும் மௌனிக்கச் செய்து, அமைதியின் பாதையில் எதிர்காலத்தைப் பிரகாசமடையச் செய்ய இத்தகைய பயணப் பாதையில் பயணிப்பதன் மூலமே இயலுமானதாக அமையும்.

இத்தகைய மகத்தான சிந்தனையை நிஜமாக்கும் தேவாலயத்தின் அந்த இனிமையான மணியோசையானது, இந்த நத்தார் காலத்தில் உலகமெங்கும் எதிரொலிக்கட்டுமாக.

உலகவாழ் சகல கிறிஸ்தவ மக்களுக்கும் அமைதியும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த இனிய நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.– என்றுள்ளது.

**மைத்திரிபால சிறிசேன**

## எம் மக்களின் மனங்களில் நம்பிக்கை, சமாதானம் மீள உயிர்ப்பிக்கட்டும்!



கிறிஸ்துநாதரின்பிறப்பைக் கொண்டாடும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் எனது மனங்கனிந்த நத்தார் தின வாழ்த்துக்கள்.

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நிகழ்ந்த கிறிஸ்து நாதரின் பிறப்பு மக்களுக்கு சமாதானத்தையும் நம்பிக்கையையும் கொண்டு வந்தது. நத்தார் பண்டிகையின் நிகழ்வுகளானது கிறிஸ்து நாதர் வெளிக்காட்டிய தாழ்மை,அன்பு,பிறரை நேசித்தல் மற்றும் தியாகம் போன்ற பண்புகளை எமக்கு மீள ஞாபகமூட்டி நிற்கின்றன. மேலும் அன்பு, மனதுருக்கம், பிறரை நேசித்தல், உண்மை, சமத்துவம் மற்றும் சமூக நீதி போன்றவை தொடர்பில் கிறிஸ்து நாதரின் போதனைகள் இன்றும் எமது சமூகங்களுக்குத் தொடர்புடையதாக இருப்பதுமன்றி எப்போதும் அவை தொடர்புடையதாகவே காணப்படும்.

நத்தார் தின ஒளியானது நம்பிக்கை இழந்து வாழும் எமது மக்களின் மனங்களில் நம்பிக்கையையும் சமாதானத்தையும் மீள் உயிர்ப்பிக்கிறதாக அமைய வேண்டுமென பிரார்த்திப்பதோடு, இந்த நத்தார் பண்டிகைக் காலங்களை வசதியற்று இயலாமையில் உள்ள எம் சக மக்கள் மீதான எமது கரிசனையை வெளிக்காட்டும் காட்டும் காலங்களாக அனுஷ்டிக்குமாறும் வேண்டிக் கொள்கிறேன்.

இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்.

**இரா. சம்பந்தன் எம்.பி.**
*எதிர்க்கட்சி தலைவர் ,*
*(தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)*

## இயேசு கிறிஸ்துவே உலகுக்கு நல்லிணக்கம், சமூக நீதியின் தூதர்

### வடக்கு ஆளுநரின் நத்தார் செய்தி



மகிழ்ச்சி மிக்க நத்தார்– 2017 எம்மிடத்தில் நிறைந்திருக்கின்றது! நத்தார் என்பது கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் ஒரு காலமாகும். இக்காலமானது எமது விழுமியங்கள், அன்பு, சமாதானம் மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. கடவுளின் எல்லையற்ற அன்பை நாம் பிரதிபலிக்கிறோம்.

யேசுபிரானின் பிறப்பு, வாழ்வு ஆகியவற்றிற்கு நிரந்தரமான உண்மைத்துவம் தரும் அன்பு, ஐக்கியம், சகிப்புத் தன்மை மற்றும் சமாதான சகவாழ்வு ஆகியவை நிறைந்த சூழ்நிலையை உருவாக்க பெருவிருப்பம் கொள்கின்ற அகில உலக கொண்டாட்ட காலமாக நத்தார் திகழ்கிறது. இயேசு கிறிஸ்துவே உலகிற்கு நல்லிணக்கம் மற்றும் சமூக நீதியின் பெரும் தூதர். ஒரு மெழுகுதிரியை ஒளிரச் செய்தல், இருளைச் சபிப்பதைவிட மேலானதும் சிறந்ததுமாகும்.

இன்று உலகில் மில்லியன் கணக்கான மக்கள் நம்பிக்கை என்னும் மெழுகுவர்த்தியை ஏற்றி உள்ளனர். நத்தார் ஒரு சமய ரீதியிலான புனிதநாள் என்பதுடன் உலகளாவிய பண்பாட்டு நிகழ்வுமாகும். இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகெங்கிலும் உள்ள மக்கள் சமய மரபுகள் மற்றும் உலகியல் பழக்கவழக்கங்களுடன் நத்தார் தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

நமது நாட்டில் நத்தார் கொண்டாட்டங்களின் ஆரம்பம் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியது. கர்த்தரான யேசுபிரான் பிறந்த தினமான டிசெம்பர் 25, நமது தாய் நாடான இலங்கையில் கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாத எல்லா சமூகத்தினராலும் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

நாம் இந்த நத்தார் தினத்தில் வசதி வாய்ப்புக்கள், வாழ்வு வளங்கள் மறுக்கப்பட்ட மக்களை சிந்திக்க வேண்டும். வறுமை, தனிமை, நோய், அன்புக்குரியவர்களின் இழப்பு– இந்த உண்மைகள் நத்தார் தினத்தில் எம்மை அவர்களுக்காக உழைப்பதற்கு திடம்கொள்ள வைக்கின்றன. இதன் முதல் படி, அவர்களிடம் நம் அன்பைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் அவர்களின் துன்பங்களை சிறிதாவது குறைக்க முடியும்.

வெளிச்சம் பிரகாசிக்கும் போது இருள் தன்னை வெளிக்கொணர முடியாது. இயேசு கிறிஸ்து சமாதானத்தின் இளவரசனும் வாழ்க்கையின் சிறந்த வெற்றியாளனும் ஆவார். பயம் நிறைந்த, பாவம் நிறைந்த, வன்கொடுமைகளுக்கு ஆளான மற்றும் வேதனைகளுக்குள்ளான மக்களுக்கு அவரது அன்பு உண்மையானதும் முழுமையானதுமாகும். அதற்கு இயேசு: சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக' என்றார் – (யோவான் 14:27)

கர்த்தராகிய இயேசு உம்மையும் உமது குடும்பத்தினரையும் சமாதானத்துடனும் செழிப்புடனும் அன்புடனும் அதிஷ்டத்துடனும் வாழ ஆசிர்வதிப்பாராக!

–இவ்வாறு ஆளுநர் ரெஜினோல்ட் குரே வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.(இ



## எங்களை முழுக்க ஏற்றுக் கொண்டாய் நீ!

உலகாள நீ வருவாய் என்று
உலகமே காத்திருக்க
ஊழியனாய் நீ வந்தாய்
உலகத்தாரை வாழவைக்க

அரசாள நீ போகின்றாய் என்று
அகிலமே நினைத்திருக்க
அயலானாய் நீ நின்றாய்
அனைவரையும் அன்பு செய்ய

மாளிகையில் நீ பிறப்பாய் என்று
மனிதர்களெல்லாம் மகிழ்ந்திருக்க
மாட்டுத் தொழுவத்தில் நீ பிறந்தாய்
மனிதத்திற்கு மாண்பளிக்க

எதற்கு நீ பிறந்தாய் என்று
ஏதேதோ கேள்வி நாங்கள் கேட்க
எங்கள் முன்னே நீ நின்றாய்
எங்களுக்கு புது வாழ்வளிக்க

என்ன உனக்கு தருவது என்று
எண்ணி நாங்கள் தவித்து நிற்க
எங்கள் வாழ்வில் நீ வந்து
ஏற்றுக் கொண்டாய் எங்களை முழுக்க!

–ஜெரால்டு

## அதிசய நாள் இன்று

சர்ப்பம் தந்த பாவத்தை
கர்ப்பம் வந்து
தீர்த்த நாள்
மரத்தால் விளைந்த பாவத்தை
வரத்தால் களைந்த
மந்திர நாள்.

வார்த்தை ஒன்று
மனிதனாய் வடிவெடுத்த
நல்ல நாள்.

தொழுவம் ஒன்று
தொழுகை பெற்ற
திருநாள்.

ஒதுக்கப்பட்டவை
வணக்கம் பெறும் என
வருகையால் சொன்ன நாள்.

ஆடிடைக் கூட்டில்
ஆதவன் உதித்த
அதிசய நாள்.

-பிரான்சிஸ் ஆதி

# மீண்டும் ஐ.தே.கவில் இணைகிறார் கெஹெலிய ரம்புக்வெல?



கொழும்பு, டிசெ. 25

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கண்டியில் எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி ஆரம் பிக்கவுள்ளது என ஐ.தே.கவின் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், கெஹலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்வார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த 2001-2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.தே.க. அரசில் அமைச்சராகப் பதவி வகித்த கெஹலிய ரம்புக்வெல, பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசுக்குத் தாவி அமைச்சர் பதவியைப் பெற்றார்.

அவர் மஹிந்த ராஜபக்ஷ அரசில், அரசாங்கப் பேச்சாளராகவும் பதவி வகித்திருந்தார்.

தற்போது மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணியில் உள்ள கெஹலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளவுள்ளார் என்றும் அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

(க)

## ஜன. முதலாம் திகதிக்கு முன் சேதமாகிய நாணயத்தாள்களை மாற்றிக்கொள்ளவும்



கொழும்பு, டிசெ.25

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் இலங்கையின் நாணயத்தாள்கள் பழுதடைந்திருந்தால் வங்கிகளிலும் வர்த்தக நிலையங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பழைய, உருமாற்றப்பட்ட, பழுதடைந்த, ஏதாவது எழுதப்பட்ட நாணயத்தாள்கள் இருப்பின், அவற்றை வங்கிகளில் கொடுத்து புதிய தாள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்கள் வேண்டப் படுகிறார்கள்.

இலங்கையில் புழக்கத்திலிருக்கும் நாணயத்தாள்களை சேதப்படுத்துதல், அதில் மாற்றங்களை செய்தல் மற்றும் சிதைத்தல் என்பன தண்டனைக்குரிய குற்றம் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாணயத்தாளை சேதப் படுத்துபவர்களுக்கு சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் விதிக்கப்படும் அளவிற்கு சட்டத்தில் இடமிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் செயற்பாட்டை நிறுத்திக்கொள்ளுமாறும், அவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ள நாணயத்தாளை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக மாற்றிக் கொள்ளுமாறும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் 31 ஆம் திகதிக் குப் பின்னர் இவ்வாறு சேதமாக்கப்பட்ட நாணயத் தாள்கள் மாற்றம் செய்யப்பட மாட்டா என்றும் மத்திய வங்கி தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## யாழில் பிரசார சுவரொட்டிகள்: மும்முரமாக அகற்றும் பொலிஸார்

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணம் நகரில் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பணிகளில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதன்படி நகரின் சில பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் பிரசார சுவரொட்டிகள் தற்பொழுது அகற்றப்பட்டு வருகின்றன.

தேர்தல் பிரசார காலத்தில் பொது இடங்களில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்ந்த பதாகைகளோ சுவரொட்டிகளோ காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்ட ஒன்றாகும். அவற்றையும் மீறிச் செயற்படுவோரை கைது செய்து விசாரிக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கால பிரசாரக் கொடிகள், பதாகைகள், சுவரொட்டிகள் மற்றும் பசையொட்டிகள் என்பன ஒவ்வொரு தேர்தல் வட்டாரங்களிலும் முறைப்படி அனுமதி பெற்று அமைக்கப்படும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் அலுவலகங்களிலேயே காட்சிப் படுத்த முடியும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை, பிரதான வீதிகள் மற்றும் தெருக்களிலும் தேர்தல் பிரசார வரைதல்களை மேற்கொள்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

# கிறிஸ்து வழங்கும்...



(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அப்போது இறைத்தூதர் யோசேப்பு முன் தோன்றி மரியாள் கருத்தரித்திருப்பது பரிசுத்த ஆவியினால் என்பதைத் தெரிவித்ததும் மனக்குழப்பம் நீங்கிய யோசேப்பு மரியாளை மனைவியாக ஏற்றுக்கொண்டார்.

மரியாள் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தபோது யூதேயா, கலீலேயா உள்ளிட்ட பகுதிகளை ஆட்சி செய்த ரோமப் பேரரசன் அகுஸ்துஸ் தேவமகனின் பிறப்பைக் கேள்விப்பட்டு ஆண் குழந்தைகளைத் தேடிக் கொல்வதற்கு உத்தரவிட்டான். இதனால் யோசேப்பின் முன்னோரான தாவீதின் நகரமான பெத்லகேமுக்கு யோசேப் பும் மரியாளும் புறப்பட்டுச் சென்றனர்.

**கோட்டை வேண்டாம்**
**கொட்டில் போதும்**

நாசரேத்துக்கும் பெத்லகேமுக்கும் இடையேயான தூரம் சுமார் 12 கிலோ மீற்றர்கள். வழக்கமாக ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கால்நடையாகவும் கழுதைகள் மீதும், வசதியிருப்போர் குதிரை வண்டிகளிலும் பயணம் செய்தனர். இப்படிப் பயணம் செய்வோர் தங்குவதற்காக ஆங்காங்கே சத்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. யோசேப்பின் குடும்பம் மிகவும் எளிய ஒன்று என்பதால் கழுதையின் மீது மனைவியை இருத்திக் கண்ணும் கருத்துமாக அழைத்துச் சென்றார். நீண்ட பயணத்தின் பின் பெத்லகே முக்குள் நுழையும்போதே மரியாள் மிகவும் சோர்வுற்றிருந்தாள்.

பெத்லகேமில் பல்வேறு ஊர்களிலிருந்தும் யூதேயாவுக்கு வரி கட்ட வந்தவர்களின் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. இருவரும் ஒவ்வொரு விடுதியாக ஏறி இறங்கிக்கொண்டிருந்தனர். எங்கேயும் தங்க இடம் கிடைக்கவில்லை. மரியாவும் சூசையும் சத்திரத்தில் தங்க வந்திருந்தபோது, அது பயணியர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. எனவே, அவர்கள் தங்குவதற்குக் கிடைத்த இடம் மாட்டுக்கொட்டகை.

அந்த இடத்தில்தான் இறைமகன் இந்தப் பூமியில் குழந்தையாகப் பிறந்தார். இந்த உலகத்தையே படைத்துப் பராமரிக்கிற இறைவனின் மகனுக்குக் கிடைத்த இடம் எளிய இடம்தான். மீட்பர், அரண்மனையில் அரசியின் வயிற்றில்தான் பிறப்பார் என்ற ஆட்சியாளர்களின் புரட்டு தீர்க்கதரிசனங்களைக் கடவுள் தன் பிறப்பின் மூலமே பொய் எனக் காட்டினார்.

**இடையர்கள்**
**கண்டனர்**

இயேசுவைக் கண்டு வணங்கிட இடையர்களே முதலில் வந்தனர். உலகத்தை மீட்க வந்த கடவுளுக்கு வணக்கம் செலுத்திட இவ்வுலகப் பெருமக்கள் வரவில்லை, மாறாக, எளிய மக்களே இறைவனை அடையாளம் கண்டுகொள்கிறார்கள். அவர்கள் இயேசுவுக்கு வணக்கம் செலுத்தியபோது விண்ணகமும் அவர்களோடு சேர்ந்துகொண்டது என லூக்கா விளக்குகிறார்.

விண்ணகத்தில் கடவுளின் பணியாளர்களாக விளங்குவோர் அவருடைய தூதர்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து இசைத்த பண்புயர் கீதம் உன்னதத்தில் இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக எனத்தொடங்குகின்ற புகழ் பாடல்.

கன்னி மரியாளிடம் பிறக்கவிருக்கும் குழந்தை இம்மானுவேல் என்று அழைக்கப்படும் என்று கப்ரியேல் வானதூதர் அறிவிக்கிறார். இம்மானுவேல் என்றால் இறைவன் நம்மோடு என்று பொருள் தருகிறார். இதுதான் கிறிஸ்துமஸ் தினத்தின் நம்பிக்கையூட்டும் நற்செய்தி. இறைவன் நம் மோடு என்றும் வாழ்கிறார் என்பதற்கு அடையாளமாகவே ஒரு குழந்தையின் வடிவில் கடவுள் நம் முன் தோன்றுகிறார்.

எனவே, நாம் தனியாக இவ்வுலகில் இல்லை, இறைவன் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை நெஞ்சில் நிரப்புவதற்காகவே அவர் பிறந்தார். நமது உள்ளங்களிலும் இல்லங்களிலும் கிறிஸ்து வழங்கும் ஒளி நிரம்பி வழியட்டும்.

★

# ஒளியாக மாற நல்வாழ்த்துக்கள்



பாலக இயேசுவின் பிறப்பை உலகமே கொண்டாடி மகிழும் நன்னாளில் நல் இதயங்கள் யாவருக்கும் இதயம் நிறைந்த நத்தார் வாழ்த்துக்கள்.

நாம் கொண்டாடும் பாலக இயேசுவின் பிறப்பு பல சோதனைகளைத் தாண்டியே சரித்திர சாதனையானது. தேடப்பட்டவரான பால இயேசு எங்கே? எப்போ? எப்படி? பிறப்பார் என எதிர்பார்த்திருந்த மக்கள் மத்தியில் மனுமகன் பிறப்போ 'சத்திரத்திலும் இடமில்லை' என அலைந்து அகதியாக மாட்டுக் குடிலில் மரியின் மடியில் பிறக்க தீவனத்தொட்டியே தஞ்சமானது.

இடையர்கள் தேடினர் மாட்டுத் தொழுவத்தில் கண்டனர். கீழைத்தேச மூவிராசாக்கள் தேடினர். வால்வெள்ளி நட்சத்திரம் வழிகாட்டியது. பரிசில்கள் கொடுத்தனர். ஏரோது அரசனும் தேடினான் பச்சிளம் பாலகனைக் கொல்வதற்காக தலைமறைவாகி அலைந்த செய்தி அதனால் நற்செய்தி பதிவாகியது. இப்பிறப்பின் செய்தியை அன்று இடையர்கள் பொறுப்புடன் பகிராவிட்டால் இன்று எமது ஒளிவிழாக்கள் அர்த்தமிழந்திருக்கும்.


இன்றைய எமது விழாக்கள் அடுத்த தலைமுறையினரும் கொண்டாடி மகிழ எமது பொறுப்புக்கள் பகிரும் நற்செய்திகள் பிறர் வாழ்வுக்கு ஒளியாக வேண்டும். இதுவே எம் வாழ்வுக்கும் ஒளிவிழாக்கள் அர்த்தமூட்டும்.

பாலக இயேசுவின் சாயலில் காணும் எம் சிறார்களின் வாழ்வில் ஒளி பிறக்க, எதிர்கொள்ளும் சவால்களை வெல்ல எம் பொறுப்புக்களை உணர்ந்து சாட்சிகளாக மாற ஒளிவிழாக்களை நற்செய்தி பகிரும் செயல்கள், விழாக்களாக மாற கொண்டாடுவோம்.


அன்புள்ளங்கள் யாவர்க்கும் எமது நத்தார் நல்வாழ்த்துக்கள்.

**செ.யோசப்பாலா**
*செயலாளர்*
*கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.*

**தரப்பட்டுள்ள உருவை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான இலக்கத்தினை அல்லது ஆங்கில எழுத்தினை தெரிவு செய்க.**

7. 


1) 10 2) 3 3) 5

8. 


1) E 2) V 3) X

**முதல் இரு சோடி சொற்கள் ஏதோ ஒருவகையில் தொடர்பினைக் கொண்டு உள்ளது. அவ்வாறு ஏதோ ஓர் வகையில் தொடர்பு உள்ள சொற்சோடிகளை தெரிவு செய்க.**

9. நாடா: நீளம்
   1) மணித்தியாலம்: நிமிடம் 2) தராசு - நிறை 3) வீதி: கார்

10. உணவு: பசி
   1) நீர்: ஊற்று 2) களைப்பு: துயில் 3) மாத்திரை - நோய்

11. தாகம்: காதம்
   1) கானம்: பாடல் 2) காரம் - ராகம் 3) தானம் - மானம்

12. பானை - களிமண்
   1) மேசை - பலகை 2) மேசை - கதிரை 3) மேசை - வாள்

**13ம், 14ம், 15ம் வினாக்களுக்கு கீழே தரப்பட்ட நான்கு சொற்களில் ஒன்று வேறுபட்டது. அதனை தெரிவு செய்து அதன்கீழ் கீறிடுக.**


13. 1) அன்பு 2) கோபம் 3) துக்கம் 4) விபத்து

14. 1) அரசி 2) அரசன் 3) கோன் 4) வேந்தன்

15. 1) ஜ 2) அ 3) உ 4) ஐ

**சரியான கோவையைத் தெரிவு செய்க.**

16. 1) $888 + 88 + 88 + 8 + 8 = 1000$
   2) $888 + 88 + 8 + 8 + 8 + 8 = 1000$
   3) $888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000$

17. 


இங்கு காட்டப்பட்டுள்ள சதுர வடிவ காணி ஒன்றில் சுற்றிவர கற்தூண்கள் நாட்டப்பட்டு உள்ளன A என்ற இடத்தில் நின்று பார்க்கப்பட்டபோது X,Y ஆகிய இரண்டு பக்கங்களிலும் நாட்டப்பட்ட 19 கற்தூண்கள் மட்டும் தெரிந்தன. இக் காணிக்கு சுற்றிவர நாட்டப்பட்ட கற்தூண்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   1) 40 2) 38 3) 36

18. 2016ம் ஆண்டு வைகாசி மாதம் 2ம் திகதி திங்கள் எனின் இதே மாதம் 29ம் திகதி என்ன கிழமை?
   1) செவ்வாய் 2) சனி 3) ஞாயிறு



**வினாத்தாள் - 2 பகுதி II இன் தொடர்ச்சி......**

31. பல வித்துக்களைக் கொண்ட பழம்
   1) மாம்பழம் 2) விளாம்பழம் 3) றம்புட்டான் 4) மரமுந்திரிகை

32. தண்டுகளின் மூலம் புதிய இனத்தைப் பெறக்கூடிய தாவரம்
   1) மரவள்ளி 2) பப்பாசி 3) மாமரம் 4) கொய்யா

33. இலங்கைக்கே உரித்தான் பறவை
   1) காகம் 2) புறா 3) கொக்கு 4) குந்துகாலி

34. எலியின் மூலம் பரவும் நோய்
   1) கொலறா 2) பிளேக் 3) வாந்திபேதி 4) நீர்வெறுப்பு நோய்

35. உழவர்களின் நண்பன் என அழைக்கப்படுவது
   1) மாடு 2) செண்பகம் 3) மண்புழு 4) கலப்பை

36. சட்டக்காந்தம் ஒன்று கொண்டுள்ள முனைகள் யாவை?
   1) வடமுனை, தென்முனை 2) கிழக்குமுனை, மேற்கு முனை
   3) வடக்குமுனை, கிழக்குமுனை 4) வடகிழக்குமுனை, தென்கிழக்குமுனை

37. கிறிஸ்தவர்களின் புனித நூல் எது?
   1) திரிபீடகம் 2) கூர்ரான் 3) பகவத்கீதை 4) வேதாகமம்

38. தமிழில் மொழி பெயர்க்கப்படாத சமய புனித நூல் எது?
   1) வேதாகமம் 2) திரிபீடகம் 3) பகவத்கீதை 4) கூர்ரான்

39. நரம்புக்கருவி எது?
   1) மிருதங்கம் 2) சலங்கை 3) கிற்றார் 4) புல்லாங்குழல்

40. இலங்கைத்தீவு அமைந்துள்ள கண்டம்
   1) ஆசியா 2) அமெரிக்கா 3) அவுஸ்திரேலியா 4) ஐரோப்பா

41. ஒட்டுண்ணித் தாவரம்
   1) மலைவேம்பு 2) பலா 3) தேயிலை 4) பனங்கற்றாளை

42. பச்சையாக உண்ணக்கூடிய உணவு
   1) பாகல் 2) புடோல் 3) வல்லாரை 4) முருங்கைஇலை

43. இலங்கையின் இன்றைய ஜனாதிபதி
   1) சந்திரிகா 2) ரணில் விக்கிரமசிங்க 3) மகிந்தராஜபக்ச 4) மைத்திரிபால சிறிசேன

44. விழுது விட்டு வளரக்கூடிய தாவரம்
   1) ஆலமரம் 2) அரசமரம் 3) வேப்பமரம் 4) அறுகம்புல்

45. இலங்கையின் தரச்சான்றிதழ் என்பதனை உறுதிப்படுத்தும் ஆங்கில குறியீடு
1) ISO 2) SLP 3) SLS 4) USA

46. நீரில் வாழும் மீனினம் சுவாசிப்பது
1) கண் 2) வால் 3) செட்டை 4) தாடை

47. ஞாபகசக்தி வளரவேண்டும் எனின் சாப்பிட வேண்டியது
1) முட்டை 2) மீன் 3) முருங்கக்காய் 4) வல்லாரை

48. ஒரு வித்திலைத்தாவரம் அல்லாதது
1) பனை 2) தென்னை 3) பலா 4) கமுகு

49. ஒருவருக்கு நாய் கடித்தால் செய்யவேண்டிய முதலுதவி
1) நாயைப் பிடித்துக் கட்டி வைப்பது
2) நாயுடன் வைத்தியசாலைக்குச் செல்லுதல்
3) A.R.V ஊசி போடுவது
4) கடித்த இடத்தினை நன்றாக நீரினால் கழுவுதல்

50. இலங்கைக்கான உத்தியோகபூர்வ பெயர்
1) சிறீலங்கா
2) இலங்கை
3) இந்து சமுத்திரத்தின் முத்து
4) இலங்கையின் ஜனநாயக சோசலிசக் குடியரசு

51. நீருடன் கலக்கக்கூடிய திரவம்
1) எண்ணெய் 2) பால் 3) டீசல் 4) நெய்

52. எண்ணெய் தயாரிக்க முடியாத வித்து
1) இலுப்பை 2) வேம்பு 3) கொய்யா 4) சூரியகாந்தி

53. வட மாகாணத்தில் உள்ள மாவட்டங்கள்
1) 3 2) 5 3) 7 4) 9

(30x1= 30 புள்ளி)

54. பாற்பற்களின் எண்ணிக்கை எத்தனை?
1) 20 2) 32 3) 4 4) 30

55. சிறுவர் தினம் கொண்டாடப்படுவது
1) தை - 1 2) பெப்ரவரி - 14 3) ஒக்டோபர் - 01 4) ஆகஸ்ட் - 01

56. இறைச்சியை மாத்திரம் உணவாக கொண்ட விலங்கு
1) நாய் 2) பூனை 3) கழுகு 4) சிங்கம்

57. தச்சுத் தொழிலில் பயன்படுத்தும் ஓர் உபகரணம்
1) மண்வெட்டி 2) சாந்தகப்பை 3) சீவுளி 4) சவள்

58. இதுவரைக்கும் இருந்த நீல அல்லி மலருக்குப் பதிலாக இலங்கை அரசால் தற்போது தேசிய மலராக அறிமுகப்படுத்திய மலர் எது?
1) அல்லி 2) தாமரை 3) மல்லிகை 4) ரோசா

(15x2= 30 புள்ளி)



# கல்விக்கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 3

அ.யஸ்ரின் பேர்னாட் B.Ed., M.Ed.

பகுதி I


நேரம்:- 45 நிமிடம்


❖ 1ம், 2ம் வினாக்களுக்கு அடுத்து வரும் உருவை இனங்கண்டு அதன் கீழ் கீறிடுக.

1.



2.



3ம், 4ம் வினாக்களில் இடைவெளிக்கு பொருத்தமான உருவை அவதானித்து பொருத்தமான உருவின் கீழ் கீறிடுக.

3.


4.


முதலாவதாக தரப்பட்ட உருவில் இடது பக்கத்தில் ஒரு கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. கண்ணாடிக்கு முன்னால் வைக்கப்பட்ட உரு கண்ணாடியில் எப்படித் தெரியும் என்பதை இனங்கண்டு சரியான விடையின் கீழ் கீறிடுக.

5.


6.




# நத்தார் சிறப்பிதழ்





- அனிதா -

## நமது உள்ளங்களிலும் இல்லங்களிலும்

# கிறிஸ்து வழங்கும் ஒளி நிரம்பி வழியட்டும்!

இறைமகன் பிறக்கப்போகிறார் என்பதன் அடையாளமாக டிசெம்பர் முதல் திகதியே வீடுகளில் நட்சத்திரம் தொங்கவிட்டு இது கிறிஸ்துமஸ் மாதம் என்று அறிவிக்கிறோம். வீட்டை ஒட்டடை அடித்து, கழுவிச் சுத்தம் செய்வதைப்போலவே நம் மனதையும் ஒட்டடை அடித்து, கழுவிக் காயப்போட வேண்டிய தருணம் இது.

இந்த ஆண்டு முழுவதும் சிறிது சிறிதாக நம் மனதில் சிந்தனையில் ஒட்டடை படிந்திருக்கலாம். நம் மனமே கடவுள் வாழும் ஆலயம். மனமே இறைமகன் பிறக்க இருக்கும் மனத் தொழுவம். அப்படியிருக்கையில் ஒவ்வொரு வருடமும் உங்களைத் தூய்மைப் படுத்திக்கொள்ள கிறிஸ்து தன் பிறப்பின் மூலம் வாய்ப்பு அளிக்கிறார் என்பதை மறந்து விடக்கூடாது. அப்படிப்பட்ட இயேசு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தப் பூமியில் அவதரித்த நிகழ்வுகளைப் பார்ப்போம்.

**எலிசபெத்தைச் சந்தித்த மரியாள்**

ரோமாபுரியின் ஆளுகைக்கு உட்பட்ட கலிலேயாவில் நாசரேத் என்ற ஊர் இருந்தது. அங்கே எளிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கன்னிப்பெண்ணிடம் காபிரியேல் தேவதூதரைக் கடவுள் அனுப்பினார். தாவீதின் வம்சத்தில் வந்த யோசேப்புக்கும் அவளுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அந்தக் கன்னிப் பெண்ணின் பெயர் மரியாள். மரியாளின் முன்பு தேவதூதர் தோன்றியபோது, கடவுளுக்கு மிகவும் பிரியமானவளே வாழ்க! நீ பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று சொன்னார். தேவதூதரின் வாழ்த்தைக் கேட்டு மரியாள் கலக்கமடைந்து, தேவதூதரின் வாழ்த்துக்கு என்ன அர்த்தம் என்று தெரியாமல் அஞ்சினாள்.

அதனால் தேவதூதர் அவளிடம், மரியாளே, பயப்படாதே; நீ கடவுளால் தேர்ந்துகொள்ளப் பட்டிருக்கிறாய். இதோ! நீ கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றெடுப்பாய்; அவருக்கு இயேசு என்று நீ பெயர் வைக்க வேண்டும். அவர் உன்னதமான கடவுளின் மகன் என்று அழைக்கப்படுவார்; அவருடைய தந்தையான தாவீதின் சிம்மாசனத்தைக் கடவுள் அவருக்குக் கொடுப்பார். அவர் ராஜாவாக யாக்கோபுடைய வம்சத்தை என்றென்றும் ஆட்சி செய்வார்; அவருடைய ஆட்சிக்கு முடிவே இருக்காது என்று சொன்னார்.

அப்போது மரியாள் குறுக்கிட்டு, இது எப்படி நடக்கும்? நான் கன்னிப்பெண்ணாக இருக்கிறேனே என்றாள். அதற்கு அவர், கடவுளுடைய சக்தி உன்மேல் வரும்; உன்னதமான கடவுளுடைய வல்லமை உன்மேல் தங்கும். அதனால், உனக்குப் பிறக்கப்போகும் குழந்தை பரிசுத்தமானது என்றும், கடவுளுடைய மகன் என்றும் அழைக்கப்படுவார். இதோ! உன் சொந்தக்காரப் பெண் எலிசபெத்தும் வயதான காலத்தில் ஒரு மகனை வயிற்றில் சுமக்கிறாள்; மலடி என்று அழைக்கப்பட்ட அவளுக்கு இது ஆறாவது மாதம். கடவுளால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதி என்று எதுவுமே இல்லைஎன்று சொன்னார். அதைக் கேட்டதும் தேவதூதர் சொன்னதை நம்பிய மரியாள், இதோ! நான் கடவுளின் அடிமைப் பெண்! நீங்கள் சொன்னபடியே எனக்கு நடக்கட்டும் என்றாள். அப்போது, தேவதூதர் அவளைவிட்டு மறைந்து போனார்.

தேவதூதர் கூறியதை உறுதிசெய்து கொள்வதற்காக மரியாள் உடனடியாகப் புறப்பட்டு, யூதாவின் மலைப் பகுதியில் இருக்கிற ஒரு நகரத்துக்கு வேகமாகச் சென்றாள். அங்கே அவள் சகாரியாவின் வீட்டுக்குள் போய், தன் உறவினள் ஆன எலிசபெத்துக்கு வாழ்த்துச் சொன்னாள். மரியாள் சொன்ன வார்த்தையை எலிசபெத் கேட்டபோது, அவளுடைய வயிற்றிலிருந்த குழந்தை துள்ளியது.

எலிசபெத் கடவுளுடைய சக்தியால் நிரப்பப்பட்டு, நீ பெண்களிலேயே மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவள்; உன் வயிற்றிலுள்ள குழந்தையும் ஆசீர்வதிக்கப்பட்டது! என் எஜமானுடைய தாய் என்னைப் பார்க்க வருவதற்கு நான் என்ன பாக்கியம் செய்தேன்! இதோ! நீ வாழ்த்திய சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள குழந்தை சந்தோஷத்தில் துள்ளியது. கடவுளுடைய வார்த்தையை நம்பிய நீ சந்தோஷமானவள்; அவர் உனக்குச் சொன்னதெல்லாம் முழுமையாக நிறைவேறும் என்று உரத்த குரலில் எலிசபெத் சொன்னாள்.

**யோசேப்பின் மனக்குழப்பம்**

தேவதூதர் தோன்றி இறைமகன் பிறப்பை அறிவித்தபோது மரியாள் யோசேப்பு என்பவருக்கு மணமுடிக்க நிச்சயிக்கப் பட்டிருந்தார். அவர் தாவீதின் வழியில் வந்தவர். மரியாள் கர்ப்பமாயிருப்பதைத் தெரிந்துகொண்ட யோசேப்பு, நல்மனம் கொண்டவராக இருந்ததால் மரியாளை ரகசியமாக திருமண ஒப்பந்தத்திலிருந்து விலக்கிவிட நினைத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க...)



## கிறிஸ்து பிறப்பு பெருவிழா உலகப் பெருவிழா மகிழ்ச்சியின் விழா

கிறிஸ்து பிறப்பு பெருவிழா இன்று கிறிஸ்தவ உலகு மட்டும் கொண்டாடும் ஒரு விழாவாக இல்லாமல் உலக மக்கள் அனைவரும் கொண்டாடும் ஓர் உலகப் பெருவிழாவாக மாறிவிட்டது.

இந்த உலகப் பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. பூவுலகில் நன் மனது கொண்டோருக்கு அமைதி ஆகுக என வாழ்த்துகிறோம்.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா ஒரு மகிழ்ச்சியின் விழா. ஓர் அன்புறவின் உறவின் விழா. ஓர் ஒன்றுகூடலின் விழா. குடும்பமாக – உறவுகளாக – நண்பர்களாக– பங்கு சமூகமாக இணைந்து குதூகலிக்கும் ஒரு விழா. கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவார். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு என்று பொருள்படும் என மத்தேயு நற்செய்தியாளர் (மத்தேயு 1:23) இவ்விழா பற்றி விளக்கம் தருகிறார்.



யாழ். ஆயரின் நத்தார் வாழ்த்துச் செய்தி

நமது இந்த கிறிஸ்து பிறப்பு பெருவிழாக் கொண்டாட்டங்கள் அனைத்திலும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை தெளிவாக உணரவேண்டும். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை உறுதிப்படுத்த வேண்டும். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை இவ்விழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் அறிவிக்க வேண்டும். இந்த உண்மைக்கு ஏற்ற விதமாக இவ்விழாவை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆடைகள் அறுசுவை உணவு பட்டாஸ் கோலங்கள் கொண்டாட்டங்கள் என மகிழ்ந்திருக்கும்போது அயல் வீட்டில் இவற்றைப் பெற முடியாதவர்கள் இருக்கிறார்கள் என்பதை மறக்காது பகிரக் கூடியவற்றை அவர்களோடு பகிர்ந்து மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குவோம். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை அவர்களும் உணரச் செய்வோம்.

போர் முடிந்து பல ஆண்டுகளாகியும் மக்களின் இயல்பு வாழ்வை மேம்படுத்துவதில் நல்லெண்ண அரசு வேகமாக செயற்படவில்லை. பல விடயங்களை இன்னும் முழுமையாக ஆற்றவில்லை என திரும்பத் திரும்பக் குறை கூறவேண்டியே உள்ளது.

இவற்றில் காணாமற்போனோர் விடயம் –அரசியற் கைதிகள் விடயம் – சொந்த நிலங்கள் விடுவிப்பு விடயம் என்பன முன்னுரிமைப் படுத்தப்பட வேண்டியன.

காணாமற் போனோர் விடயத்திற்கு உடன் முடிவு காணுங்கள். இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது அதே வேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. மனித உயிர் சம்பந்தமான இப் பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது உடன் முடிவு காணுங்கள். இறந்தவர்களுக்கு சமயக் கடமைகளை நிறைவேற்றி உறவுகள் தம் மனங்களை ஆறுதற்படுத்தவும் இறந்தவர்களுக்கான இறப்பு

சான்றிதழைப் பெறவும் இழப்பீடு பெறவும் வழி செய்யுங்கள்.

அரசியற் கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள். அவர்கள் வாழ்வை சிறைக்கம்பிகளின் பின்னால் இனியும் வீணடிக்காதீர்கள். ஏற்கனவே மன தளவில் பாதிக்கப்பட்ட அவர்கள் முழுமையான விடுதலை பெற விரைவாகச் செயற்படுங்கள் என தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகிறோம்.

சொந்த நிலங்களில் மக்கள் சென்று குடியமர்ந்தால்தான் யுத்தம் முடிந்து விட்டதென மக்கள் மன அமைதி கொள்வர். மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றுங்கள். அவர்களுக்கு அரச காணிகள் நிறையவே உண்டு. போராட்டம் முடிந்தமையால் அவர்கள் தள்ளி இருப்பதே சிறந்தது.

இவற்றைச் செயற்படுத்த காலம் கடத்துவதால் எதுவும் நடைபெறப் போவதில்லை. நல்லெண்ண அரசு இந்த அடிப்படை வசதிகளை நேர காலத்தோடு செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி இந்த நாட்டில் இனி வருங்காலத்தில் தமிழ் சிங்களம் என்ற இரு இனங்களும் இணைந்தே வாழவேண்டும் என்ற சமாதான சமிக்ஞையைக் காட்டி இருக்க வேண்டும்.

இன்று என்றுமில்லாத அரசமைப்பு ஒன்றை உருவாக்க நிலமைகள் சாதகமாக இருப்பதால் தமிழ்



மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு அரசமைப்பில் உறுதிப்படுத்தப் பட்ட தீர்வைக் காண அரசியலில் சம்பந்தப்பட்ட அனைவரும் அனைத்து வேறுபாடுகளையும் மறந்து உழைக்க வேண்டுமென அன்பு அழைப்பு விடுக்கிறோம். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் இறையாசீர்மிக்க வாழ்த் துக்களைத் தெரிவிக்கிறோம்.

**மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம்**
(யாழ் ஆயர்.)

## ஆர்.கே.நகர் நேற்று விழாக் கோலம்:

# தினகரன் பெரு வெற்றி!

# ஜெயலலிதாவையும் விஞ்சினார்!!

★ 40 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் 2ஆம் இடம் அ.தி.மு.கவுக்கு

★ கட்டுப்பணத்தையும் இழந்தது தி.மு.க.

சென்னை, டிச.25

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் அ.தி.மு.க.மற்றும் தி.மு.க. கட்சிகளுக்கு இடையே சுயேச்சை வேட்பாளராகக் களம் இறங்கிய டிடிவி. தினகரன் 40ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளார்.

ஆர்.கே.நகர் தொகுதிக்கு கடந்த மாதம் 21ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்தத் இடைத்தேர்தலில் மொத்தமுள்ள 2 லட்சத்து 28 ஆயிரத்து 234 வாக்காளர்களில், ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 885 பேர் வாக்களித்திருந்தனர். இது வாக்கு எண்ணிக்கைமொத்தமாக 77.5 வீதவாக்குப்பதிவாகும்.

இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி ராணி மேரி கல்லூரியில் நேற்று அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளது. வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| சுயேச்சை - தினகரன்: | 89, 013 |
| அ.தி.மு.க. - மதுசூதனன்: | 48,306 |
| தி.மு.க. - மருதுகணேஷ்: | 24,651 |
| நாம் தமிழர் - கலைக்கோட்டுதயம்: | 3,802 |
| பா.ஜ.க. - கரு. நாகராஜன்: | 1,368 |
| நோட்டா (எந்த வேட்பாளரையும் ஏற்காதோர்): | 2,348 |

தனித்துக் களமிறங்கிய டி.டி.வி தினகரன் தொடக்கம் முதலே முன்னிலை வகித்து வந்தார். இந்த நிலையில், அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகளுக்கு இடையே குக்கர் சின்னத்தில் சுயேச்சையாக போட்டியிட்ட டி.டி.வி. தினகரன் சுமார் 40ஆயிரத்து 707 வாக்குகள் வித்தியாசத்



தில் அபார வெற்றி பெற்றுள்ளார். இந்தத் தேர்தலில் தி.மு.க. உட்பட 57 பேர் கட்டுப்பணம் இழந்துள்ளனர்.

கடந்த 2016ஆம் ஆண்டில் ஜெயலலிதா போட்டியிட்டு 39ஆயிரத்து 545 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஆனால், இந்த முறை சுயேச்சையாகக் களமிறங்கிய தினகரன் 40ஆயிரத்து 707 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதிவான வாக்குகளில் 50.32 வீத வாக்குகள் பெற்றார். அ.தி.மு.க.வில் இருந்து ஓரம் கட்டப்பட்ட டி.டி.வி. தினகரன் சுயேச்சையாக குக்கர் சின்னத்தில் போட்டியிட்டு சாதித்துக் காட்டியுள்ளார். இந்த வெற்றியின் மூலம் தமிழக அரசியல் களத்தில் புதிய தலைவராகவே தினகரன் அவதாரம் எடுத்துள்ளார் என்று கூறினால் அது மிகையாகாது.

ஆர்.கே.நகரில் பெற்ற வெற்றியின் மூலம் நான் இல்லாமல் தமிழக அரசியல் களம் இல்லை என்பதை தினகரன் ஆணித்தரமாகவே உணர்த்தி இருக்கிறார். அவரது ஆதரவாளர்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியுள்ளனர்.

## வீழ்ந்தது பா.ஜ.கட்சி அல்ல தமிழகம்தான் என்கிறார் தமிழிசை



ஆர்.கே.நகர் தேர்தலில் பா.ஜ.க. பின்னடையவில்லை, தமிழகம் பின்னடைந்துள்ளது என்று தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.


தமிழகம் முழுவதும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய ஆர்.கே.நகர் தொகுதிக்கான தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட தினகரன் மற்ற போட்டியாளர்களைவிட அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

இந்த நிலையில், தேர்தல் முடிவு தொடர்பாகக் கருத்து தெரிவித்த தமிழிசை,

பா.ஜ.க. வீழ்ந்து விட்டது என்று கூற வேண்டாம். தமிழகம்தான் வீழ்ந்துள்ளது. ஆர்.கே நகர் தேர்தலில் பதிவான வாக்குகள் , வாக்கு விற்பனை வெற்றிகரமாக நடந்துள்ளதை காட்டுகிறது என்றும் தமிழிசை விமர்சித்துள்ளார்.

## 'நோட்டாவை' விட பா.ஜ.கவிற்கு குறைவு

### சுவாமியின் கிண்டல் 'டுவிட்'



சென்னை,டிசெ.25

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் பா.ஜ. கவுக்கு எந்த வேட்பாளரையும் ஏற்கவில்லை என்பதற்கான வாக்கை ('நோட்டா'வை - None of the Above - NOTA) விடக் குறைவான வாக்குகளே கிடைத்துள்ளன என சுப்ரமணியசுவாமி தனது டுவிட்டர் பக்கத்தில் கிண்டலாக டுவிட் செய்துள்ளார்.

இது தொடர்பாகக் கிண்டலாக டுவிட் செய்துள்ள சுப்பிரமணிய சுவாமி, தமிழக பா.ஜ.க. சாதனை! ஆளும் தேசியக்கட்சி தமிழக இடைத் தேர்தலில் நோட்டாவுக்குக்கிடைத்துள்ளவாக்குகளில் கால் வாசியைத் தான் பெற்றுள் ளது.இது பொறுப்பை உணர வேண்டிய தருணம் எனத் தெரி வித்துள்ளார்.

இதற்கு முன்பாக, ஜெயலலிதா மரணம் மூலமாக டிடிவி.தினகரன் வெற்றி பெற்று விடுவார், 2019 நாடாளுமன்ற தேர்தலைச் சந்திக்க இரு அணிகளும் இணைய வேண்டும் என பதிவிட்டிருந்தார்.

## மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் சசி



ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் தினகரன் வெற்றிபெற்றதால் சசிகலா மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. வில் இருந்து சசிகலாவும் தினகரனும் ஓரங்கட்டப் பட்டனர். அதன்பிறகு இரட்டை இலை திரும்ப கிடைத்த நிலையில் அ.தி.மு.க. தொடர்பாக மக்களின் மனநிலை என்ன? யாருக்குச் சாதகமாக இருக்கிறார்கள் என்ற விவரம் தெரியாமல் இருந்தது.

இதற்கான விடையைத் தெரிந்துகொள்ள ஆர்.கே. நகர் தேர்தல் ஒரு சிறந்த வழியாகக்கருதப்பட்டது. அதிகாரப்பூர்வ கட்சியான அ.தி.மு.கவை எதிர்த்து எதிர்க்கட்சிகள் போட்டியிட்டாலும் தினகரன் போட்டியிட்டதையே அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் தேர்தல் முடிவு தினகரனுக்குச் சாதகமாக அமைந்தது. இதன் மூலம் மக்களும், தொண்டர்களும் தினகரனுக்குச் சாதகமாக இருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

பெங்களூர் சிறையில் இருக்கும் சசிகலா ஆர். கே.நகர் இடைத்தேர்தல் முடிவை ஆவலுடன் எதிர் பார்த்து இருந்தார்.

தினகரன் வெற்றி பெற்றதைச் சிறை அதிகாரிகள் மூலம் தெரிந்து கொண்ட சசிகலா மிகவும் மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஆர்.கே.நகர் இடைத்தேர்தல்: முந்திக்கொண்ட விக்கிபீடியா

சென்னை,டிசெ.25

ஆர்.கே நகர் இடைத்தேர்தலின் முழு முடிவு வருவதற்குள் டி.டி.வி. தினகரன் அந்தத் தொகுதியின் பதினைந்தாவது எம்.எல்.ஏ. என விக்கிபீடியாவில் பதியப்பட்டுள்ளது.

சென்னை ஆர்,கே நகர் தொகுதி இடைத்தேர்தலின்வாக்குஎண்ணிக்கை நடந்துகொண்டிருந்த போது சுயேச்சை வேட்பாளர் தினகரன் முன்னிலையில் இருந்துகொண்டிருந்தார்.

பத்தாவது சுற்று வாக்கு எண்ணிக்கை மட்டுமே நிறைவு பெற்ற நிலையில் முழு நிலவரம் தெரிய இன்னும் சில மணிநேரங்கள் ஆகலாம் என்ற போக்கு காணப்பட்டது.

ஆனால், பிரபல தகவல் மையமாக கருதப்படும் விக்கிபீடியா ஆர்.கே.நகர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளர் தினகரன் வெற்றி பெற்று விட்டார் என அறிவித்தது.

தேர்தல் ஆணையம் இந்தத் தகவலை வெளியிடுவதற்கு முன்பாகவே இத்தளம் வெற்றியைப் பதிவு செய்தமை பரபரப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# ஆஷஸ் தொடர்: 'பொக்சிங் டே' டெஸ்டில் மிட்செல் ஸ்டோக் நீக்கம்

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையிலான 'பொக்சிங் டே' டெஸ்டில் இருந்து ஆஸ்திரேலியாவின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஸ்டோக் நீக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் நாளை மெல்போர்னில் ஆரம்பமாகிறது. கிறிஸ்மஸ் விழாவிற்கு அடுத்த நாள் தொடங்கும் இப்போட்டிக்கு 'பொக்சிங் டே' என்று பெயர். இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய வீரர்கள் ஆடும் லெவனில் விளையாட விரும்புவார்கள்.

முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா, 90 ஆயிரம் ரசிகர்களுக்கு மத்தியில் விளையாட ஆர்வமாக இருக்கிறார்கள். இந்த நிலையில் வலதுகாலின் குதிக்காலில் காயம் ஏற்பட்டுள்ளமையால் மிட்செல் ஸ்டோர்க் டெஸ்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஸ்டோக் விளையாட விரும்பிய நிலையிலும், அடுத்து தென்னாபிரிக்காவுடன் ஆஸ்திரேலியா விளையாட இருக்கிறது. இதனால் ஸ்டோக்கை விளையாட வைக்க ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை விரும்பவில்லை. அணியில் விளையாடாதமை மிகச்சிறந்தது அல்ல. இருந்தாலும் 100 வீதம் உடற்தகுதி இல்லாமல் விளையாடுவது சுயநலமாக இருக்கும். நாங்கள் தொடரை வென்றுள்ளமையால் பாதுகாப்பான நிலையுடன் விளையாட முடியும் என ஸ்டோக் கூறியுள்ளார்.






# 2017இல் அதிக கோல்: மெஸ்ஸியைத் துரத்தும் ஹாரி கேன்

2017ஆம் ஆண்டில் அதிக கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் முதல் இடத்தில் உள்ள மெஸ்ஸியை டோட்டன்ஹாம் வீரர் ஹாரி கேன் துரத்துகிறார்.

உதைபந்து விளையாட்டில் மெஸ்ஸி, கிறிஸ்டியானோ ரொனால்டோ, நெய்மர் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்து வருகிறார்கள். 2017ஆம் ஆண்டு மட்டும் மெஸ்ஸி பார்சிலோனா மற்றும் ஆர்ஜென்டினா அணிகளுக்காக இதுவரை 54 கோல்கள் அடித்துள்ளார். நேற்றுமுன்தினம் வரை நடைபெற்ற எல் கிளாசிகோவில் அடித்த ஒரு கோலும் இதில் அடங்கும்.

இந்த வருடத்தில் அதிக கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் மெஸ்ஸி இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் இங்கிலீஷ் பிரீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் டோட்டன்ஹாம் ஸ்பர்ஸ் அணி புர்ன்லே அணியை எதிர்த்து விளையாடியது. இதில் டோட்டன்ஹாம் அணி 3:0 என வெற்றி பெற்றது. இந்த மூன்று கோல்களையும் இங்கிலாந்தைச் சேர்ந்த ஹரி கேன்தான் அடித்தார்.

இந்த வருடத்தில் ஹரி கேனின் 7ஆவது ஹாட்ரிக் கோல் இதுவாகும். மேலும் நேற்று முன்தினம் அடித்த மூன்று கோல்கள் மூலம் 53 கோல்கள் அடித்துள்ளார். இன்னும் ஒரு கோல் அடித்தால் மெஸ்ஸியின் கோல் எண்ணிக்கையை சமன் செய்து விடுவார். டோட்டன்ஹாம் ஸ்பர்ஸ் அணிக்கு இந்த வருடத்தில் வரும் 26ஆம் திகதி நடைபெறும் போட்டி மட்டுமே உள்ளது. அதன்பிறகு போட்டியில்லை. இதனால் அந்தப் போட்டியில் இரண்டு கோல்கள் அடித்தால் மெஸ்ஸியின் சாதனையை முறியடிக்க வாய்ப்புள்ளது.

தற்போது ரொனால்டோ, ரொபர்ட் லெவான்டோஸ்கி, எடின்சன் கவானி ஆகியோர் 53 கோல்கள் அடித்துள்ளனர்.

# சாதித்தது பார்சிலோனா; லா லிகா பட்டத்தை நழுவ விட்டது ரியல் மட்ரிட்!




லா லிகா தொடரில் மிகவும் எதிர்பார்ப்பு மிக்க போட்டியான எல் கிளாசிகோ போட்டி பல எதிர்பார்ப்புக்கள், போட்டிகள், சர்ச்சைகள், சண்டைகள் என்பவற்றுக்கு மத்தியில் நடைபெற்ற போட்டியில் பார்சிலோனா வெற்றி பெற்றுள்ளது.

சொந்த மைதானத்தில் ரசிகர்களின் ஆரவாரத்துக்கு மத்தியில் போட்டியை ஆரம்பித்த ரியல் மட்ரிட் ஆரம்பம் முதல் போட்டியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. ஆட்டம் தொடங்கி 2 ஆவது நிமிடத்திலேயே ரொனால்டோ பந்தை கோல் கம்பத்தினுள் அடித்தாலும் அது ஓவ் சைட் என நடுவரால் அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்திய ரியல் மட்ரிட் பார்சிலோனாவிற்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கியது. பார்சிலோனா வீரர்களும் தமது பங்கிற்கு சற்று ஆதிக்கத்தை வெளிப்படுத்தினாலும் முதல் பாதி ரியல் மட்ரிட் ஆதிக்கத்துடன் 0:0 என நிறைவடைந்தது.

இந்தத் தொடரின் மற்றைய போட்டிகளைப் போலவே இரண்டாம் பாதியை தனதுகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது பார்சிலோனா. அடுத்தடுத்து ரியல் மட்ரிட்டை அச்சுறுத்திய பார்சிலோனா 54ஆவது நிமிடத்தில் கூட்டு முயற்சியில் சுவரேஸ் மூலம் முதல் கோலைப் பெற்று முன்னிலை பெற்றது. தொடர்ந்து அச்சுறுத்திய பார்சிலோனா 63 ஆவது நிமிடத்தில் சிறப்பான ஒரு கோல் முயற்சியை மேற்கொள்ளும்போது பந்தைக் கையால் தடுத்தமைக்காக ரியல் மட்ரிட் பின்கள வீரர் கர்வஜால் சிவப்பு அட்டை பெற்று வெளியேறினார்.

இதன் மூலம் கிடைத்த பெனால்டி வாய்ப்பை மெஸ்ஸி கோல் ஆக்கினார். தொடர்ந்து 10 வீரர்களுடன் விளையாடிய ரியல் மட்ரிட்டை பார்சிலோனா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. ரியல் மட்ரிட் இன் கோல் முயற்சிகள் யாவும் பார்சிலோனாவால் முடக்கப்பட்டன. அத்துடன் போட்டி முடியும் தறுவாயில் விடல் ஒரு கோல் அடித்து அசத்த இறுதியில் பார்சிலோனா 3:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட்டை தனது சொந்த மைதானத்தில் வைத்து வீழ்த்தியது.

கடந்த 3 வருடங்களாக லா லிகா







தொடரில் பெர்னாபேயுவில் ரியல் 'மட்ரிட்'டின் சொந்த மைதானத்தில் நடைபெற்ற எல் கிளாசிகோ போட்டியில் பார்சிலோனா வெற்றி பெற்று அசத்தியுள்ளது.

லா லிகா பட்டத்துக்கான ஓட்டத்தில் இப்போட்டிக்கு முன் வரை 11 புள்ளிகள் பார்சிலோனாவை விட பின்தங்கியிருந்த ரியல் மட்ரிட் இப்போட்டியில் தோற்றதன் மூலம் 14 புள்ளிகள் பின்தங்கி லா லிகா பட்டத்தை கிட்டத்தட்ட நழுவவிட்டுள்ளது என்றே கூறலாம்.

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளனர்.

இதனால் அந்தப் பகுதி நேற்றுப் பெரும் சோகத்தில் மூழ்கியது. நேற்று மாலை இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் 2019 வணிகப் பிரிவில் கல்வி கற்கும் புதுக்குடியிருப்பு, சிவநகரைச் சேர்ந்த தவராசசிங்கம் தனுசன் (வயது–17), 2019 உயிரியல் பிரிவில் கல்வி கற்கும் சிவராசா பகீரதன் (வயது –17) ஆகிய மாணவர்களே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 7 இளைஞர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் விடுமுறை நாளைக் களிப்பதற்காக கள்ளியடிப் பகுதியில் உள்ள ஆற்றுக்குச் சென்றுள்ளார்கள். அங்கு அவர்கள் குளித்துக்கொண்டிருந்தபோது இருவர் காணாமற் போயுள்ளனர். நீண்டநேரம் தேடியும் பயன் கிட்டவில்லை.

இந்தத் தகவல் காட்டுத் தீ போல அந்தப் பகுதியெங்கும் பரவியது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த கிராம மக்களின் பலத்த தேடுதலுக்கு மத்தியில் சேற்றில் புதையுண்ட நிலையில் இரு மாணவர்களின் உடல்களும் மீட்கப்பட்டன.

குறிப்பிட்ட ஆற்றுப் பகுதியில் அதிகளவான மண் எடுக்கப்பட்டுள்ளதால் அது ஆழமான பகுதியாகவும், சேறு நிறைந்ததாகவும் காணப்பட்டுள்ளது. இதனாலே மாணவர்கள் சேற்றில் புதையுண்டனர் எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த புதுக்குடியிருப்புப் பொலிஸார் சடலங்களை எடுத்து புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்த்தனர்.

மரண விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கையின் பின்னர் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த மாணவர்களில் பகீரதன் என்பவர் கடந்த வருடம் இடம்பெற்ற ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சையில் 9 ஏ சித்திகளைப் பெற்ற மிகவும் திறமையான மாணவர் எனக் கூறப்பட்டது.

இதேபோன்று கடந்த தீபாவளி தினத்தன்றும் முல்லைத்தீவுக் கடலில் மூழ்கி இரண்டு உயர்தரப் பிரிவு மாணவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மஹிந்த காலத்து...

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்கு வைத்து இந்த நூல் வெளியிடப்படவுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள், காணாமல் போதல்கள், ஊடகவியலாளர்கள் கொலைகள், பாரியளவிலான ஊழல் மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு விட யங்கள் தொடர்பில் அம்பலப்படுத்தும் நோக்கில் இந்தக் கையேடு வடிவிலான நூல் வெளியிடப்படவுள்ளது.

பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் நோக்கில் இந்த நூல் வெளியிடப்படவுள்ளது. தராதரம் பாராது குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் யார் என்பதனையும் அந்த நபர்களின் பதவி நிலைகள் தொடர்பிலும் இந்த நூலில் குறிப்பிடுவதற்கு ஜே.வி.பி.யின் அரசியல் சபை தீர்மானித்துள்ளது. (ஐ)

## துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட நபரை பதில் நீதிபதி சுதர்சனின் இல்லத்தில் பொலிஸார் முற்படுத்தினர். இதன்போது அவர் 40 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஐ)

## மலேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில வார இதழ் 'சண்டே ரைம்ஸ்' நேற்று வெளியிட்ட தகவல்கள் வருமாறு:–

மலேசியப் பிரதமர் நஜீப் துன் ரஸாக்கின் இரண்டு நாள் விஜயம் மும்சர்ச்சையுடனேயே இடம்பெற்றது.

நிகழ்ச்சி ஒழுங்கின்படி இலங்கை வரும் பிரதமர் ரஸாக், வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரனைச் சந்திப்பார் என்றிருந்தது.

கூட்டமைப்பின் வேறு தலைவர்கள் எவரையும் மலேசியப் பிரதமர் சந்திக்க ஒழுங்கு செய்யப்படமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் ஆத்திரமுற்றது. கூட்டமைப்பில் ஒருவர் இந்த விடயத்தை பிரதமர் ரணிலிடம் எழுப்பினார்.

இது விடயத்தில் பிரதமர் ரணிலின் அலுவலகம் தனது அதிருப்தியை கொழும்பில் உள்ள தனது வெளிவிவகார அமைச்சுக்கு தெரியப்படுத்தியது.

மலேசியப் பிரதமர் – வடக்கு மாகாண முதல்வர் சந்திப்பை இலங்கை அரசு அங்கீகரிக்கவில்லை என்ற காரணத்தை காட்டி இந்த சந்திப்பை ரத்துச் செய்வதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் பல்வேறு தொடர் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால் அவை எவையும் பயனளிக்கவில்லை. (சந்திப்பு திட்டமிட்டபடி இடம் பெற்றது)

மலேசியப் பிரதமருடன் வருகை தந்த அந்த நாட்டின் மூத்த அதிகாரிகள், இந்தச் சந்திப்பு தங்களது தலைவரின் (மலேசியப் பிரதமரின்) கோரிக்கையின் பேரில் ஒழுங்கு செய்யப்பட்டது என்றும் அதனால் அதை ரத்துச் செய்யவே முடியாது என்றும் விடாப்பிடியாக நின்றனர்.

முன்னைய திட்டப்படி, தங்களுடைய பிரதமர் இந்த இலங்கை விஜயத்தின்போது யாழ்ப்பாணத்துக்கே நேரடியாகச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார் என மலேசியத் தரப்பில் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

"விக்னேஸ்வரனுடனான எமது பிதமரின் சந்திப்பு மிகவும் வெற்றியாக அமைந்தது. (இந்தச் சந்திப்பில்) எமது பிரதமர் மிகவும் ஈர்க்கப்பட்டார்." – என்று அந்த அதிகாரி பின்னர் தமது நண்பர் ஒருவரிடம் உறுதிப்படுத்தினார்.

மலேசியப் பிரதமர் – விக்னேஸ்வரன் சந்திப்பின்போது மலேசிய சுகாதார அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சதாசிவமும் உடனிருந்தார். மலேசிய இந்திய காங்கிரஸின் தலைவர் அவர். மலேசியாவில் இந்தியத் தமிழ் வம்சாவளியினரின் முன்னாள் அரசியல்வாதியும் கூட.

அவரே, மலேசியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது மலேசியப் பிரதமர் வடக்கின் தமிழ்த் தலைவரைச் சந்திக்க முயன்றமைக்குப் பிரதான காரணமானவராக இருக்கலாம்."

–இப்படி 'சண்டே ரைம்ஸ்' மேலும் தெரிவித்தது. (உ)

## வடக்கு மாகாண விவசாய அமைச்சருக்கு டெங்குக் காய்ச்சல்

யாழ்ப்பாணம், டிசெ 25

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் டெங்கு நோய்த் தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 5 நாள்களாகத் தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனைக்குச் சென்றார். அங்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் இவர் டெங்குத் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது இதனைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளரங்கில் கூடவிருக்கின்றனர்.

அந்தக் கூட்டத்தில் வைத்தே தமது முடிவை மஹிந்த ராஜபக்ஷ விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொதுஜன பெரமுன கட்சியில் இதுவரை எந்தப் பதவியையும் வகிக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் போஷகராகவும் இருந்து கொண்டு உத்தியோகப்பற்றற்ற முறையில் – மறைமுகமாக பொதுஜன பெரமுனக்கு அவர் ஆதரவு வழங்கி வந்தார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறும் பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில், அதற்கு தலைமையேற்கும் முடிவை அவர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில்

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளைஞர் தீயில் எரிந்து கருகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

இரு இளைஞர்களும் மரண வீடு ஒன்றுக்குச் சென்றுவிட்டு வட்டுக்கோட்டை–தெல்லிப்பழை வீதி வழியாகப் பயணித்துள்ளனர். இதன்போது வட்டுக் கோட்டைப் பிரதேச வைத்தியசாலைச் சந்திக்கு முன்னால் வீதி ஓரத்தில் இருந்த மின் கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியது. இதனால் படுகாயமடைந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே நினைவிழந்தார். இதன்போது மோட்டார் சைக்கிள் எரிபொருள் தாங்கி வெடித்ததால் திடீரென்று தீப்பிடித்துள்ளது. இதனால் அந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே எரிந்து கருகினார்.

இவருடன் பயணமான மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மக்களால் மீட்கப்பட்டார். மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் மக்கள் தீயை அணைத்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்ப்பாணம் குற்ற தடயவியல் பொலிஸார் வட்டுக்கோட்டைப் பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டதோடு தடயங்களை கையகப் படுத்தினர். (ஐ)

# மரத்திலிருந்து விழுந்த சிறுவன் பரிதாபச் சாவு

திருமலை, டிசெ 25

மரத்தில் சிக்கிய பட்டத்தை எடுக்க ஏறிய சிறுவன் தவறி விழுந்து உயிரிழந்துள்ளான் என திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை சோனக வாடிப் பகுதியில் சிறுவன் பட்டம் விட்டுக்கொண்டிருந்தபோது அது மரத்தில் சிக்கியுள்ளது. அதனை எடுக்க ஏறிய சிறுவன் மரத்திலிருந்து வீழ்ந்து நேற்றுப் பிற்பகல் உயிரிழந்துள்ளான்.

அதே இடத்தைச் சேர்ந்த ஆர்.எப்.எம்.றிம்ஸான் (வயது15) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். (ஐ)

## மஹிந்த தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சு.க. தலைமை வெளியிட்டு வந்த போதிலும், அப்படி எந்த நடவடிக்கையும் இதுவரை அது எடுக்கவில்லை. அத்தகைய நடவடிக்கையால், இறுதியில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி மஹிந்த தரப்பின் கைகளில் போய் விழுந்து விடும் என்று கருதியே சு.க. தலைமை அவ்வப்போது வெறும் மிரட்டல் அறிவித்தலோடு அடங்கி வந்தது.

ஆனால் –

சு.க. சார்பில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பட்டியலில் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு எம்.பியாகி, நாடாளுமன்றப் பதவியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் மஹிந்தவும் சுமார் நாற்பது எம்.பிக்களும், இப்போது சு.கவுக்கு நேர் எதிராக தேசிய மட்டத்தில் நடக்கும் தேர்தலிலேயே பகிரங்கமாகக் களமிறங்கிய பின்னரும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்காமல் – இனியும் அவர்கள் சு.க.வின் எம்பிக்களே என்று கூறிக் கொண்டிருப்பது சுதந்திரக் கட்சியின் தலைமைக்கும், அதன் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இழுக்கு என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆகையால், இம்முறை கட்சியின் ஒழுங்கு நடவடிக்கையை முன்னெடுப்பது தவிர்க்க முடியாத கட்டாயமாக சு.கவுக்கு ஏற்பட்டுள்ளது. அத்தகைய நடவடிக்கை எடுக்கும் நெருக்கடிக்குள் சு.க. தலைமையைத் தள்ளுவதும் மஹிந்த தரப்பின் திட்டம் என்று கூறப்படுகின்றது.

ஒழுங்கு நடவடிக்கையின் முதல் கட்டமாக மஹிந்த மற்றும் அவர் தரப்பு எம்.பிக்களிடம் சு.க. தலைமை விளக்கம் கோரும். தொடர்ந்து கட்சியின் அங்கத்துவத்திலிருந்து முதலில் அவர்களை இடைநிறுத்தி, பின்னர் வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

கட்சியிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படும்போது அதன் காரணமாக அவர்கள் கட்சியின் சார்பில் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் இழப்பர் என்பதால் அது குறித்துக் கட்சி, சபாநாயகருக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிக்க வேண்டியிருக்கும்.

அப்படி அறிவிக்கப்படும் சமயத்தில், அதனை ஆட்சேபித்து சம்பந்தப்பட்ட எம்.பி. ஒவ்வொருவரும் அதற்கு எதிராக நீதிமன்றில் உரிய முறைப்படி வழக்குத் தாக்கல் செய்தால், அந்த வழக்கின் விசாரணை முடியும் வரை எம.பி. பதவியிலிருந்து அவர்களை வெளியேற்றுவதற்கு எதிராக நீதிமன்றத்தில் இடைக் காலத் தடை உத்தரவு பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய விடயத்தில் அதுதான் இதுவரை பொதுவான சட்ட நடவடிக்கை முறைமையாக உள்ளது.

அவ்வாறான நிலையில் –

ஒருபுறம், மேற்படி சுமார் நாற்பது எம்.பிக்களையும் தாங்கள் சு.கவிலிருந்து வெளியேற்றிவிட்டனர் என்ற சு.கவின் அறிவிப்பு சபா நாயகருக்குக் கிட்டியிருப்பதால் அவர்களை அதற்குப் பின்னரும் சு.கவின் அல்லது சு.கவும் சேர்ந்து உரு வாக்கிய ஐக்கிய மக்கள் முன்னணியின் எம்.பிக்களாகக் கருத முடியாத நிலைமை சபாநாயருக்கு ஏற்படும்.

மறுபுறம், நீதிமன்ற வழக்கு முடியும்வரை அவர்களை எம்.பி பதவியிலிருந்து விலகியவர்களாகக் கருத முடியாத நிலையும் சபாநாயகருக்கு ஏற்படும்.

அந்தந்தச் சூழ்நிலையில், சு.கவிலோ அல்லது அதன் மூலம் அரசிலோ அங்கம் வகிக்காத ஒரு தனி குழுவினராக அந்த ஐம்பது பேரையும் கருதி அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் இடமளிக்க வேண்டிய கட்டாயம் சபாநாயருக்கு ஏற்படும்.

அவ்வாறு நேர்ந்தால், இந்தக் குழுவினர் சு.கவில் உள் ளடங்காத தனி எதிர்க்கட்சிக் குழுவினர் என்று தாங்களை உரிமை கோரும்போது அதைத் தவிர்க்க முடியாமல் ஏற்க வேண்டிய கட்டாயமும் –

அதனடிப்படையில் தமிழ்க் கூட்டமைப்பை விட அதிக எம்.பிக்களைக் கொண்ட அக்குழுவின் தலைவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கி அதை அங்கீ கரிக்க வேண்டிய இக்கட்டும் –

சபாநாயகருக்கும் ஏற்படும் எனசம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மஹிந்த தரப்பின் எம்.பிக்கள் நாற்பது பேரும், சு.கவின் பிரதிநிதிகள் என்று காரணம்காட்டியே அத்தரப்பு இதுவரை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்காமல், இது தொடர்பான அவர்களின் கோரிக்கையை சபாநாயகர் புறந்தள்ளி வருகின்றார் என்பதும்–

எதிர்க்கட்சித் தலைவர் பதவி மஹிந்த தரப்பின் கைகளில் விழுந்துவிடும் ஆபத்து உள்ளது என்ற காரணம் கருதியே அத்தரப்பினர் மீது சு.க. தலைமை இது வரை ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கட்சியை விட்டு வெளியேற்றாமல் தொடர்ந்து வெறும் மிரட்டல் அறிவிப்பை அவ்வப் போது விடுப்பதுடன் அடங்கி நிற்கின்றது என்பதும் – குறிப்பிடத் தக்கவையாகும். (உ)

## மஹிந்த தரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய சட்ட முறைப் படி எடுக்கப்படும். அவர்கள் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டு, கட்சி அங்கத்துவத்திலிருந்து வெளியேற்றப்படுவர். அதன் காரணமாக அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படும். அது குறித்து தேர்தல் ஆணையாளருக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கப்படும்.

–இவ்வாறு அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

புதிய பஸ் நிலையத்தில்

# வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்குமாறு வவுனியா நடமாடும் வியாபாரிகள் கோரிக்கை!

வவுனியா, டிசெ. 25

வவுனியா நடமாடும் வியாபார சகவாழ்வு சங்கத்தின் வியாபாரிகள் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் வியா பாரம் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் ஏ9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையம் நத்தார் தினத்தன்று மீள இயங்க ஆரம்பிக்கும் என வட மாகாண போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், பஸ்ஸில் ஏறி வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு புதிய பஸ் நிலைய வளாகத்திற்குள் வியாபாரம் செய்ய பஸ் நிலைய நிர்வாகம் அனுமதி மறுத்துள் ளது.



ஆகவே வவுனியா நடமாடும் வியாபார சங்கத்தின் தலைவர் ஆறுமுகம் சிவகுமார் புதிய பஸ் நிலையத்தில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த 17 வருடங்களாக பஸ்களில் வியாபாரம் செய்து வருகிறோம். வவுனியா ஏ9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையத்தில் பஸ் களில் ஏறி வியாபாரம் செய் வதற்கு அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

இந்த வியாபாரத்தை நம் பியே எங்கள் குடும்பங்கள் இருக்கின்றன. அத்துடன், வவு னியாவில் 57 வியாபாரிகளின் குடும்பங்களின் வாழ்வாதாரம் இதை நம்பியே இருக்கிறது.

நாம் எங்கள் பிள்ளைகளின் கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை விடயங்கள் இத் தொழிலை நம்பியே பூர்த்தி செய்கிறோம்எனக் குறிப்பிட் டுள்ளனர். (கு-100)

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை!



கொழும்பு, டிசெ. 25

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளிலும் விசேட பஸ் போக்குவரத்து சேவைகள் செயற்படுத்தப்படவுள்ளன. இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 150 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

பண்டிகை காலத்தை முன்னிட்டு பெரும்பாலானோர் கொழும்பில் இருந்து நாட்டின் பல்வேறு இடங்களுக்குச் செல்வதற்கும் பின்னர் மீண்டும் கொழும்பு திரும்புவதற்கும் இந்த மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்து பிரதி முகாமையாளர் பி.எஸ்.ஆர்.டி சந்திரசிறி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வேலை நிமித்தம் கொழும்பில் வசிக்கும் மக்கள் பண்டிகைக் காலங்களில் தங்களது சொந்த வதிவிடங்களுக்கு செல்வார்கள்.

இதன்போது ஏற்படும் சன நெரிசல் மற்றும் போக்குவரத்தில் ஏற்படும் அசௌகரியங்களைக் குறைப்பதற்காகவும் பயணிகள் நலன் கருதியும் இவ்வாறு மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

## கோடிக் கணக்கில் பணம் செலவழிக்கும் கொழும்பு இராணுவத் தலைமையகம்

கொழும்பு, டிசெ. 25

கொழும்பில் இயங்கி வந்த இராணுவத் தலைமையகத்தின் செயற்பாடுகளுக்குக் கோடிக் கணக்கான பணம் செலவிடப்பட்டு வருகிறது என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

காலி முகத்திடலுக்கு முன்னால் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் காணி, சகிரிலா ஹோட்டலுக்கு நடவடிக்கைக்கு கடந்த அரசால் வழங்கப்பட்டது.

இதன் காரணமாகத் தலைமையகத்தில் செயற்பட்ட ஓர் இராணுவ பிரிவின் அலுவலகத்தை நடத்திச் செல்வதற்கு வேறொரு கட்டடம் ஒன்று வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்திற்காக வருடத்திற்கு 500 கோடி ரூபா பணம் வாடகையாகச் செலவிடப்படுவதாக ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இராணுவத் தலைமையகப் பிரிவு கொழும்பு மாவட்டத்தின் 15 இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. அதற்காக மாதாந்தம் 44 கோடி ரூபாவை அரசு செலவிட நேரிட்டுள்ளது.

ஒரே கட்டடத்தொகுதியின் கீழ் செயற்பட்ட இராணுவ அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செயற்படுத்தி வந்த போதிலும், தற்போது அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேவையற்ற முறையில் பல்வேறு இடங்களில் இராணுவ அலுவலகங்களை நிறுவி பெரியளவு பணம் செலவிடப் பட்டுள்ளது என இராணுவத் தகவல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இராணுவத் தலைமையக காணியைச் சீன நிறுவனத்திற்கு விற்பனை செய்தமையின் ஊடாக 825 கோடி ரூபாய் மாத்திரமே கிடைத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (கு)

## வைரஸ் காய்ச்சலில் ஐவர் பலி; பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 25

கடந்த ஒரு மாதகாலத்துக்குள் ஒருவகை வைரஸ் காய்ச்சலால் ஐந்து பேர் பரிதாபகரமாக மரணித்துள்ளார்கள் என்று அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என். றெமன்ஸ் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த பரிதாபத்திற்குரிய சம்பவம் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடிவேம்புப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்றும் இந்த வைரஸ் தொற்று நேரடியாக சுவாசப்பையை தாக்குவதாகவும் இதனால் சுவாசப்பை பழுதடைந்து மரணம் சம்பவித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்கள் அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், காய்ச்சல் வந்தால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியரின் பரிசோதனையை மேற்கொண்டு அவர்களின் ஆலோசனைகளுக்கமைவாக நடந்துகொள்ளுமாறும் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

வைரஸ் காய்ச்சல் என்பது நாம் பருகும் தண்ணீர், சுவாசிக்கும் காற்று மற்றும் நுளம்பு வகைகள் போன்றவற்றாலேயே மிக வேகமாகப் பரவுகின்றது.

இத்தகைய காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ்கள் எமது உடலினுள் சென்று மூன்று தொடக்கம் ஏழு நாள்களில் தமது வினைபுரிதலை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (கு)

# மன்னாரில் உரம் தட்டுப்பாடு; விவசாயிகள் கவலை

மன்னார், டிசெ. 25

மன்னார் மாவட்டத்தில் நெற்செய்கைக்கான உரம் தட்டுப்பாட்டால் விவசாயிகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் எனக் கட்டுக்கரைக்குளம் விவசாயிகள் சம்மேளனத் தலைவர் எம்.எஸ். சில்வா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் வருடந்தோறும் கட்டுக்கரை குளத்தின் கீழ் காலபோகம் விவசாயத்தை மேற்கொள்வதற்கு முன் மன்னார் மாவட்ட அரச அதிபரின் தலைமையின் கீழ் இது சம்பந்தமான கூட்டம் இடம்பெறுவது வழமையாகும்.

இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கட்டுக்கரைக்குளம் விவசாய சம்மேளன நிர்வாக உறுப்பினர்கள், விவசாயத்திணைக்கள அதிகாரிகள் மற்றும் அனைத்து விவசாயிகள் உட்பட பலர் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு அமைவாகவே நடப்பு வருடத்துக்கான காலபோக விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைய இந்த வருடம் மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 30 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை செய்வதென வும் இதற்கான எரிபொருள் மற்றும் உரம், விதைநெல் ஆகியன பெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் அந்தந்தத் திணைக்களங்களால் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த விவசாயிகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இன்றி விதைநெல் வழங்கப்பட்டபோதும், உரம் தட்டுப்பாட்டால் இந்த விவசாயிகள் பல அசௌரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.




அதாவது, செய்கை பண்ணப்படும் நெல்லுக்கு 55 நாள்களுக்குள் மூன்று தரம் யூரியா, பொற்றாஸ், பொஸ்பெரஸ் ஆகிய உரங்கள் இடப்பட வேண்டும்.

இதுதொடர்பில் கட்டுக் கரைக்குளம் விவசாயிகள் சம்மேளனத் தலைவர் எம்.எஸ். சில்வா மேலும் தெரிவிக்கையில்–

மன்னார் விவசாயிகள் காலபோகம் செய் கைப் பண்ணப்பட்டு சுமார் நாற்பது நாள்கள் கடந்த போதும் மன்னாரில் உரம் தட்டுப்பாட்டால் ஓர் இது வரைக்கும் அதிகமான விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு இன்னும் ஓர் உரம் கூட இடவில்லையென கவலை தெரிவிக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

கமத்தொழில் திணைக்களம் அத்துடன் பதிவு செய்யப்பட்ட வாத்தகர்கள் விவசாயிகளுக்கு 2500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் அவர்களிடம் உரம் இல்லாமையால் தனியாரிடம் 2800 ரூபா கொடுத்தே உரம் வாங்க வேண்டியநிலைமையும் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-112)






இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் புனித டொன் பொஸ்கோ இளைஞர் மன்றத்தால் உருவாக்கப்பட்டுள்ள 30 அடி உயரம், 16 அடி அகலம் கொண்ட நத்தார் தாத்தா.



# நன்றி நவில்கின்றோம்

## லயன் செ.மகாதேவா MJF, JP

எமது குடும்ப தீபம் லயன் செல்லத்துரை மகாதேவா அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து உடன் நொதேர்ண் வைத்தியசாலைக்கும், பின் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் விரைந்து வந்து சகல உதவிகளையும் வழங்கிய அன்புள்ளங்களுக்கும், பின்னர் இறுதிக் கிரியைகளில் கலந்து நேரடியாக அஞ்சலி செலுத்தியோர் மற்றும் அஞ்சலி உரைகளை நிகழ்த்திய சமய, சமூக நிறுவனங்களின் தலைவர்கள், பெரியோர்கள், லயன்ஸ் கழக ஆளுநர் சபை உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், தென்னிலங்கை மற்றும் சகல மாவட்டங்கள் எனத் தூர இடங்களிலிருந்து வந்த லயன்ஸ் கழக உறுப்பினர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அமைப்புக்கள், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் வைத்தவர்கள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர், பத்திரிகைகள் மற்றும் முகநூல்களில் அஞ்சலி தெரிவித்தோர், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டோர், பாண்ட் அணிவகுப்பு மரியாதை நிகழ்த்திய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், கல்லூரிச் சமூகத்தினர், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், அமரரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டோர், வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தோர், போசன உதவிகள், சரீர உதவிகள் மேற்கொண்டோர் மற்றும் பல வழிகளில் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்லூரி வீதி, கந்தரோடை,
சுன்னாகம். 077 704 1767

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.